தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, புரட்டாசி 31 (17-10-'59). சனிக்கிழமை | இதழ் 18

ஈழத்தில் இலக்கியக் குரல்!

பன்மொழி கற்றவரும், தென்மொழிக் காவலருமான கா. அப்பாத்துரையாரவர்களை அழைத்து, அவரின் சொற்பொழிவைக் கேட்டு மகிழும் வாய்ப்பை அண்மையில் இலங்கை பெற்றது. நடந்த திங்களில் 19, 20-ம் நாட்களில், கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள, சைவ மங்கையர் கழகம் தனது பதினேழாவது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் திடீரென 19-ம் நாள் காலை மறைந்த துக்கத்தால், விழா அமைதியான முறையில் கொண்டாடப் பெற்றது. விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு, இலங்கை அரசினர் வணிகத் துறையின் நிரந்தரச் செயலாளரும், சைவ மங்கையர் கழகத் தலைவருமான திரு. கோ. ஆழ்வாப் பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார்கள்; இரண்டாம் நாள் நிகழ்ச்சிகட்கு, முன்னை நாள் கல்வி அலுவலரும், ஷை கழகத் துணைக் காப்பாளருமான திரு. க. ச. அருள்நந்தி அவர்கள் தலைமை தாங்கினார்கள். விழா நிகழ்ச்சிகளை ஷை கழகப் பாதுகாப்பாளரும் முன்னை நாள் வீடமைப்பு-கைத்தொழில் அமைச்சருமான சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். விழாத் தொடங்குவதற்கு முன்னர் தமிழர் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் மறைவு குறித்து ஓர் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, இரு நிமிடம் அமைதி மேற்கொள்ளப்பட்டது.

— 12-ம் பக்கம் —

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறார்.

தென்புதுவை-முகமது, முகவை.

வடமொழிக் கலப்பின்றியே தமிழ் எழுத முடியுமென்கிறேன் நான். எனது நண்பர் மறுக்கிறார். உங்கள் முடிவு என்ன?

தமிழ்த்திரு மறைமலையடிகளார் நூல்களை வாங்கி உமது நண்பரிடம் கொடுக்கவும்.

★

வெங்கட்டராமன்,
குமாரமங்கலம்.

"நப்போல் வளை"-பொருள் கூறுக.

"ந"கரம் ஒன்றே அவ்வின எழுத்துக்களில் அடிக்கடி பயன்பட்டுத் தன் இனத்துக்கே உதவுவதுபோல மனிதன் உதவவேண்டுமென்பதும், 'ந'வைப்போல உடம்பு வளைந்து பணி புரியவேண்டுமென்பதும் இதன் பொருள்கள்.

★

கோவி. இளந்திரையன்,
சித்திக்காடு.

தாலுகாவிற்கு வட்டம், கூற்றம், கோட்டம் எனப் பல சொற்கள் உளவே; அவற்றில் எதை ஏற்றுக்கொள்வது?

கூற்றம் என்பதும், கோட்டம் என்பதும் வரலாற்றுக் கால வழக்குகள்தான். எனினும் இன்று பெரும்பாலும் வட்டம் வழக்கிற்கு வந்துவிட்டது. நல்ல தமிழ்ச்சொற்கள் ஒரே பொருளுடையனவாய் ஒன்றுக்கு மேலிருந்தால் பழக்கத்தில் உள்ளதைக் கொள்ள வேண்டும். அப்படிக்கொண்டால் புரியவில்லை என்போர் குறைவாக இருப்பார்கள்.

யாழ்தேவி சென்றீர்களா?

இல்லை. காலம் கடந்த அனுமதி கிடைத்தது. மாநாடும் அங்கே முடிந்துவிட்டது.

★

புதுமைச் சிற்பி, சுழிபுரம்.

எழுத்தின் அளவைக் குறிக்கும் "மாத்திரை" தமிழ்ச் சொல்லா, வடசொல்லா?

கால் மாத்திரையும் குறையாத பச்சைத் தமிழ்!

★

இரா. நாராயணன், திருச்சி–8.

கண்ணகியின் சீற்றத்தினால் மதுரை தீக்கிரையானது உண்மையில் நடந்ததா, அல்லது கற்புக்குப் பெருமை தரும் வகையிலும், காப்பிய நயத்துக்காகவும் சொல்லப்பட்டதா?

சிறப்பை வலியுறுத்த நடக்க முடியாததையும் விரிவுபடுத்துவது காப்பிய ஆசிரியர்கள் வழக்கம். கண்ணகியிற் சிறந்த கற்புடையோர் இன்றும் உளர். சென்னையை எரிக்க முயன்று அவர்கள் வெற்றி பெற்றுவிட்டால், கண்ணகி மதுரையை எரித்தது உண்மையெனக் கொள்ளலாம். சிலம்பு உரைக்கும் இந்தக் கருத்துக்கு, புதிய புதிய விளக்கங்கள் புறப்படுகின்றன. எனினும் அது கவிமிகைப்பாடே என்பதில் ஐயமில்லை.

★

சிவன், தி. நகர், சென்னை–17.

**கல்லாதான் சொற்கா
முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்
றற்று.**

—இந்தக் குறளுக்குத் தெளிவான பொருள் வேண்டும்! பெண்மை என்றால் என்ன?

படிக்காதவன் மேடை ஏறிப் பேச விரும்புவது கொங்கைகளற்றவள் பெண்மையை இச்சித்தாற் போலாகும்-இது அதன் பொருள்.

உடல் அமைப்பில் ஆண்மையிலிருந்து பெண்மை ஈரிடங்களில் வேறுபடுகிறது. ஓரிடம் கொங்கை யாதலின் கொங்கையற்றவர்கள் பெண்மையற்றவர்களாகக் கருதப் படுகிறார்கள். பெண் தன்மையே பெண்மை. அந்தத் தன்மை, உள்ளத்தால், உடலால் ஆண்மையிலிருந்து வேறுபட்ட உணர்ச்சியைத் தருவது. இது இயற்கையில் உணரப்பட வேண்டியதே தவிர, சொல்லுக்கு அடங்காது.

★

வி. அருள்தாசு-மதுரை.

'பேதை' எனும் சொல் எவ்வகையினரைக் குறிப்பது?

"தென்கிழக்கு ஆசியாவிலேயே நான்தான் எழுத்தாளன்", "எனக்குத்தான் உலகிலேயே அதிகக் கடிதங்கள்வருகின்றன. (ஏனென்றால் நான் செத்த கடிதங்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன்)" என்று நகைப்புக்குரிய விதத்தில் தன்னைப்பற்றி எழுதும் கால் வேக்காடுகளைக் குறிக்கும்.

★

ஆர். சுந்தரநடனம்-தில்லை.

உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் புத்தகம் எது?

அண்ணா சொன்னதுபோல், "புகை வண்டி காலஅட்டவணை".

★

கு. மாயன்-பூங்காட்டிருப்பு.

இயக்க ஏடுகளல்லாத பிற தமிழ் ஏடுகளில் நீங்கள் விரும்பிப் படிக்கும் ஏடு எது?

"மஞ்சரி"-அது பயனுள்ள ஏடு.

★

சி. மல்லிகை-திருப்புவனம்.

"தன்னை அறிந்துகொள்" என்ற பழமொழி ஏன் பிறந்தது?

உன்னை அறிந்துகொண்டால், பிறரை அளப்பதற்கு ஒரு அளவுகோல் கிடைத்துவிடுகிறது.

ஏ. பஞ்சவருணம்-மாகாளிபட்டி.

"பூரணி மாடு" என்கிறார்களே, ஒரு வகை மாட்டை-இந்தப் பெயர் அவற்றிற்கு ஏன் வந்தது?

அதனை, "பூரணையன்மாடு" என்கிறார்கள் மைசூரில் பூரணையன் பெரும் பதவியில் இருந்தபோது, பீரங்கிகளை இழுக்கப் பயன்பட்ட வகையைச் சேர்ந்தது அது என்றும், அதனாலே பூரணையன் பெயர் பெற்று, 'பூரண' ஆயிற்று என்றும் கூறப்படுகிறது.

★

கே. பசவப்பா-பெங்களூர்.

'திப்புசுல்தான்' கதையைத் தமிழில் படமாக எடுத்தால் என்ன?

இந்தியில் அது தோற்றுவிட்டது. வெள்ளையரை எதிர்த்த கதை, தமிழில் சலித்துவிட்டது.

★

மு. ராசா-மதுரை

"திராவிட நாடு வேண்டுமா? தமிழ்நாடு வேண்டுமா?" என்று சிலர் கேட்கத் துவங்கியிருக்கிறார்கள். இவர்களுக்கு என்ன பதில் சொல்வது?

"தாய் வேண்டுமா? தாரம் வேண்டுமா?" என்று திருப்பிக் கேளுங்கள். "இருவரும் வேண்டும்" என்பார்கள். நம் கொள்கை அதுதான்.

★

கே. பழநி-பழநி

எழுதப் படிக்கத் தெரியாதவனைத் 'தற்குறி' என்கிறார்கள்? இதன் பொருள் என்ன?

தயவு செய்து இந்த வார்த்தையை இனி எழுதாதீர்கள். இதைக் கேட்கும்போது ஒரு குழந்தை இதழ் பிறவிக்குக் கோபம் வருகிறதாம்.

★

நா. துரைக்குமரன்,
அண்ணாமலை.

"ஆனந்த விகடன்" இதழில், "மணிமொழி நீ என்னை மறந்துவிடு" என்றொரு தொடர்கதை வந்ததே, படித்தீர்களா?

நான் படிக்கவில்லை. கொத்தமங்கலம் சுப்புவைக் கேட்டேன். 20,000 வாசகர்கள், அந்தக் கதை வந்தவுடன், 'ஆனந்த விகடன்' படிப்பதையே மறந்துவிட்டார்களாம். முடித்தால் போதும் என்றாகிவிட்டதாம். சுப்பு மிகவும் வருத்தப்பட்டார்.

புலித்தேவனைப் பற்றி ஒரே ஒரு பிறவிமட்டும் கத்திக்கொண்டிருக்கிறது. நாட்டில் யாருமே கவனிக்கவில்லையே, ஏன்?

எடுத்துச் சொல்கிறவனுக்கு ஓர் அளவாவது தகுதி வேண்டும். சிலராவது மதிக்க வேண்டும். தகுதியற்றவன் பேச ஆரம்பித்ததால், புலித்தேவன், தமிழ்நாட்டின் காமெடியனாக ஆகிவிட்டான்.

ஆசிரியத் தோழனுக்கு

யாவர் குற்றம்?

புறங்கூறும் புன்மைநமக் கில்லை யன்றோ;
புகழ்மாலை ஏதுமவர் சூட்ட வேண்டா!
திறங்காண மறுக்கின்ற வேளை தன்னில்
"தென்றல்"தான் புயலாதல் யாவர் குற்றம்?
அறம்பாடி நம்புலவர் வென்றார் முன்னர்;
அவர்சிந்தை அணுவேனுங் கொள்ள வேண்டும்
மறங்காத்துக் கண்ணதாசர் சொன்ன வெல்லாம்
மனமுவக்கப் போற்றியானும் கூறு கின்றேன்;
தன்னகத்து நிறைமானம் அற்று நின்று
தமிழ்மலையின் நடைபழித்துப் புன்மை கொண்டு
கன்னலொத்த தமிழ்த்தந்தை கூறும் சொல்லைக்
கண்மறைத்துத் தமிழல்ல என்று ரைத்துத்
தென்னகத்துத் தேமொழியில் நாட்டங் கெட்டுத்
தெளிவிழந்த வடமொழியின் சொல்லை நாட்டும்
பன்னகத்தின் நச்சொழிக்கப் பொங்கி யோங்கு
படையெங்கள் இளங்கூட்டம் என்று ணர்வீர்!

-எழிலன், விருதுநகர்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 17—10—'59 ‖ இதழ் 18

கோட்டை விட்ட கோமானும் நாட்டை மீட்கும் நகரத்தந்தையும்

கொடிகள் பறக்கவில்லை!

கோல முழுமதிமுகத்தார் வாழ்த்துப் பாடி வரவேற்க வில்லை!

கூலிப் படையினர் அணிவகுத்து நிற்கவில்லை!

மாலை தூக்கிகள் வரிசையாய்க் காத்திருக்கவில்லை!

இவை இல்லை என்பதைவிட, இவை இல்லாமலிருப்பதையே அவர் விரும்பினார் என்பதே பொருந்தும்!

ஆமாம்! அனைத்துலகுக்கும் சமாதான வெளிச்சத்தைத் தூக்கிச்சென்ற அவர், இருளடர்ந்த நள்ளிரவிலே வந்தார்.

தனக்கினை யாருமில்லை என்ற தருக்குடன், தாரை, தப்பட்டை முழங்க, தாசர்கள் சூழ்ந்துவர வந்திருக்கிறார் இதே நகரில். ஆனால்... அன்றோ, ஊரார் எல்லாம் அயர்ந்து தூங்கும் வேளையில், மக்கள் துணை எதையும் எதிர்பாராது, காரில் விரைந்துசென்றார். அவரைச் சுற்றிவந்ததெல்லாம் 12 கார்களும் 4 மோட்டார் சைக்கிள்களும் தாம். அனைத்தும் காவல் துறையினர் ஏறிவந்த வண்டிகள். ஆயிரமாயிரம் மக்களுக்கிடையே நாள்தோறும் சுற்றிவந்து பெருமை பேசுபவர், தன்னை 16 வண்டிகளுக்கூடே புதைத்துக் கொண்டு சென்ற காட்சியை இந்தக் கிழமை, சென்னை நகரம் கண்டது!

இப்படித் தங்காமல் தங்கி, ஓடாமல் ஓடி விரைந்து சென்ற இருளரசர், வேறுயாருமில்லை; ஆசியாவின் சோதி என்று புகழப்பட்ட நேரு அவர்கள் தான். கடந்த 12-10-57 இரவில் சென்னையில், புகைவண்டியில் ஒரு காலும், விமான நிலையத்தில் மற்றொரு காலுமாக வைத்துக்கொண்டு பறந்தார். வழக்கமாக அவருக்கிருக்கும் வரவேற்புகள், ஆரவாரங்கள் எதுவுமே அன்றிரவில்லை. நியூயார்க்குக்குப் போனாலும், இலண்டனுக்குப் போனாலும், அங்கு எந்நேரத்தில் இறங்கினாலும், இருப்போரை எல்லாம் கால்கடுக்க நிற்கவைத்து, அறிவுரை கூறுகின்ற அந்தக் கோமான், அன்றிரவு சென்னையில் வந்த சுவடு தெரியாமல் விரைந்துசென்றார். மக்களின்மயக்கம் தெளிந்துவிட்டது. பாரதத்தாயின் மக்கள் சொல்லிய விளக்கங்களையும் கிளப்பிய முழக்கங்களையும், தமிழ்நாட்டார் நம்பிக்கொண்டிருந்த நாட்கள் மலையேறிவிட்டன. இதுதான் நாடாளும் நாயகரான நேரு, நள்ளிரவு நாயகரான கதையின் கரு. தமிழ் மக்களின் உணர்ச்சிகளை, இதய எழுச்சிகளை அப்படியப்படியே எதிரொலிப்பதுதான் சென்னை நகரின் நிகழ்ச்சிகள் என்றோம். தென்னகமெங்கும் காங்கிரசுக் கோட்டை சரிந்து வருவதை, நேரு சென்னைக்கு வந்த கதை சொல்கிறது என்றோம். எனின், நேரு பெருமகனாரின் கட்சி செல்வாக்கிழந்தது ஏன்? சொல்லாக்காசானது ஏன்? எவரால் வந்ததிந்த நிலை?

காங்கிரசார் சிந்திக்க மறுத்தபோதும் காலவளர்ச்சி, நிலைக்கண்ணாடியாக நேரில் நிற்கிறது. கைப்புண்ணைக் காண அவர்கள் கண்ணாடி கேட்கிறார்கள். நாம் தெள்ளிய கால ஆடியையே காட்டுகிறோம். காங்கிரசாரின் பேச்சுக்கள் அத்தனையும் வெறும் வாய்வீச்சுக்களாகவே ஆகிவிட்டன.

நாம் சொல்வதற்கு முன்பே, நாட்டுமக்கள் நிலையை உணர்ந்து விட்டனர். தீமை வெள்ளம் திரும்பிய பக்கமெலாம் பெருகுவதைக் கண்டு விட்டனர். துடிப்பும் உணர்ச்சியும் அவர்களை உந்தித்தள்ளியதால், வெள்ளத்திலிருந்து தப்ப ஒரு படகை விரும்பினர்.

பார்த்த வெளியெலாம் இருள் போர்த்துக்கிடந்தது. வழி தவறித் திண்டாடியோர் விடிவெள்ளியாகிலும் தட்டுப்படாதா என்றலைந்தனர்.

அலைந்த விழிகளுக்கு, ஒரே ஒரு படகு இடம் தந்தது. தேடிய கண்களுக்கு, ஒரே ஒரு ஒளிமீன் தட்டுப்பட்டது. ஆம்! ஆம்! தேம்பிய திராவிடர்க்கு, திண்டாடி அலைந்த தென்னாட்டார்க்கு தி. மு. கழகம் நம்பிக்கையளித்தது; வழியையும் காட்டியது.

நம்பிக்கையும் நல்லெண்ணமும் வளர்ந்ததால், நாட்டோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கம் திரும்பினர். நாளொரு கலையும் பொழுதொரு பொலிவுமாக, கழகம் வளர்ந்தது, நாடு முழுவதும். கழகம் எளிதில் இந்த நிலையைப் பெற்றிடவில்லை. கழகத் தோழர்கள் எண்ணரிய துன்பங்களை ஏற்று வளர்ந்தனர். இன்று சென்னை வந்துபோயிருக்கும் நேருகூடச் சொல்வார், இந்த உண்மையை. நாமறிந்ததுபோல அவரும் அறிவார் நம் நிலையையும் பணிகளையும். இதே நேரு அவர்களின் அரசு நமக்கிழைத்த கொடுமைகளையும், நம்மீது எய்த அவமானக் கணைகளையும் நாம் பலமுறை கண்டித்திருக்கிறோம்.

நேருவின் நாத்துடுக்கையும் இந்தி வெறியையும் நாம் பலமுறை கண்டித்திருக்கிறோம். அப்போதெல்லாம் அவரும் அவரது அடியார்களும் இழைத்த கொடுமைகள் ஒன்றா? இரண்டா?

வசைமொழி சிந்திய நேருவின் வாயடைக்கக் கருங்கொடி காட்டினர் அரசுவும் தோழர்களும். அவர்கள் தமக்குள் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டது தவறென்று சீறியது, சென்னை அரசு. சைதையிலே தோழர் அரசு அவர்களைக் குருதி சிந்தத் தடியால் தாக்கியது. அத்தோடு அரசு அவர்கள்மேல் பல வழக்குகளையும் போட்டது!

இத்தனையும், கழகத்தை அடக்கிவிடுவதற்காக அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள். ஆனால், "நீதி மறந்தோரின் நினைவுகள் என்றும் செயலாவதில்லை" என்ற பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறது, காலம். எந்தத் தோழர் அரசு கருங்கொடி காட்டியதற்காகக் குற்றவாளியாக்கப் பட்டாரோ, அதே தோழரை நகரத் தந்தையாக்கினர் மாநகர் மக்கள். எந்த இயக்கத்தை நாச சக்தி என்று காங்கிரசார் பழிதூற்றினரோ, அந்த இயக்கத்தை ஆளும் இயக்கமாக்கினர், மக்கள்.

எந்த மனிதனின் கையில் இருக்கும் கருப்புக்கொடி தனக்குப் பிடிக்கவில்லையென்று நேரு சொன்னாரோ, அதே மனிதனின் கையால் நேரு பூமாலை பெற்றுக்கொண்டார். நகரத்தின் முதல் குடிமகன் தனக்கு மாலையிடுவதை, பெரும் பூரிப்புடன் ஏற்றுக்கொண்டார். ஆமாம்! இதே பண்டிதர்தான் அன்று அரசுவின் கையிலிருந்த கருங்கொடியைக் கண்டு வயிறெரிந்தவர். கழகத் தோழர் அரசு, நகரத் தந்தை அரசு ஆனதுதான் இதன் அடிப்படை! மக்கள், ஓர் எதிர்க் கட்சியை ஆளும் கட்சியாக்கியதுதான் இந்தக் காட்சியின் வித்து! பாண்டியனையும் மொய்தீன் பிச்சையையும் பலியிட்டு இத்துணை பெரிய வெற்றியை ஈட்டிக் காட்டிய சென்னை மாவட்டக் கழகம் பெருமைப்பட்டுக்கொள்வதில் பொருளிருக்கிறது. தன் மான இயக்க நாள் தொட்டு, சென்னை, இயக்க வரலாற்றில் ஒரு தனியிடம் பெற்றுக்கொண்டது. தவிர்க்கவும் தகர்க்கவும் முடியாத ஓர் ஆற்றலை வளர்த்து வந்த சென்னை மாவட்ட தி. மு. க. மாநிலத்தில் மற்ற எந்த எதிர்க் கட்சியும் சாதிக்கமுடியாத ஒன்றை, சாதித்துக் காட்டியது. ஆனால், இந்த வெற்றி எளிதில் ஈட்டப்பட்டதன்று. இதையும் நாமறிவோம். நம்மை எதிர்த்து நின்ற அதிகார வெறிக்கு அவ்வப்போது பலி தந்திருக்கிறோ[illegible] சென்னை கழகத் தோழர்கள் பலரின் உயிரையும் குருதித் துளி[illegible] கொட்டிக் கொட்டித் தந்திருக்கிறது. போராட்டக் காலங்களில் [illegible] உழைத்திருக்கிறது. சென்னை மாவட்டக் கழகத்தின் கடந்த மா[illegible] பெற்ற ஞான்று, நமது கழகத்தின் கண்மணிகள் பல[illegible] கிடந்தன. நம்மாநாட்டுக் கொட்டகைக்கு அருகிலேயே [illegible] கூடத்தில் அவை கிடந்து நலிந்தன.

சென்னை மாவட்டத்தின் முன்னாள் செயலாளரான திரு. [illegible] அயரா உழைப்பாளி. ஆர்வமும் ஆற்றலும் பெற்றெடுத்[illegible] தொண்டர். இயக்கத்தின தொடக்க காலம்தொட்டு, கழ[illegible] சாகக் கருதி உழைத்து வருபவர். கழகத் தோழர்களுடன் [illegible] களைத் தவறாது கண்டவர்; வாழ்க்கை முழுவதும் மாறாத-ஆறாத போர்ப் புண்களைப் பெற்றவர். அவர் இன்று சென்னை மாவட்ட மூன்றாவது மாநாட்டின் செயலாளர்களுள் ஒருவராகப் பணியாற்றுகிறார். ஆனால் இந்த தோழர் கண்ணபிரான் அன்று அலமேலு அப்பாத்துரையார்போன்ற தொண்டர்களுடன் சிறைக்கூடத்திலே கிடந்து வாடினார். அறிஞர் அண்ணா அவர்கள்கூட, கண்ணபிரானும் பிறரும் சிறையில் வாடும் காட்சியைச் சோகத்துடன் சொல்லி, "இந்த நாட்டுக்கு விடுதலை வேண்டாமா?" என்று கேட்டார்கள். மக்கள் அவ்வினாவுக்கு அளித்த விடையை நாம் இன்று காண்கிறோம்.

அன்று சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் இரண்டாம் மாநாடு நடக்கும்போது நம் தோழர்கள் சென்னைச் சிறைக்கோட்டத்தில். இன்று மூன்றாவது மாநாடு நடக்கும்போது நம் தோழர்கள் சென்னைமா நகராட்சி மன்றத்தில்...1957-ல் திராவிட அரசின்மீது தடியடி; கொள்ளை வழக்கு!

1959-ல் அவர்களின் பூமாலைக்குக் காத்து நிற்கிறார் பண்டித நேரு! "இதுதான் உலகம்!" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டால் போதாது "இதுதான் காலத்தின் வளர்ச்சி; கழகத்தின் வலிமை!" என்று விளக்கவும் வேண்டும். இப்படி, சென்னை நகரில் சீருடனும் சிறப்புடனும், பொலிவுடனும் எழிலுடனும் வளர்ந்து பூத்துக் குலுங்கும் கழகத்தார் தமது மாநாட்டை இன்றும் நாளையும் நடத்துகின்றனர். வரிசையாக நடந்துவந்த மாவட்ட மாநாடுகளிலே இஃது இறுதி மாநாடு என்பது மட்டுமல்ல, இதன் பெருமை. சென்னையின் வெற்றிமிக்க வரலாற்றில் இது ஒரு காலக்கல் என்ற பெருமையும் இதற்குண்டு!

தோழர் செங்குட்டுவன் வரவேற்புக்குழுத் தலைவராகவும், கண்ணபிரானும், இளஞ்சேரலாதனும் செயலாளர்களாகவும், நகரத்தந்தை அரசு அவர்கள் பொருளாளராகவும், தி. சு. நல்லதம்பி எம். சி. அவர்கள் தொண்டர் படைத்தலைவராகவும் பணியாற்றி மாநாட்டின் வெற்றிக்கு வழி வகுக்கின்றனர்.

எவரையும் எளிதில் நம்பிவிடும் இளகிய உள்ளம் படைத்த தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்கிறார். எவரையும் எடைபோட்டுக் கவனிக்கும் எஃகு உள்ளம் படைத்த தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறார். இந்த இரு கூறுகளுக்கும் இடை நிற்கும் மைய மண்டபமான அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் விருந்து படைக்க இருக்கிறார்கள். மாவட்ட மாநாடுகளில் இது கடைசி மாநாடு. வருக! வாழ்வு பெறுக!

"தென்றல்" தொலைபேசி
எண்: 83510

★ "முன்-தமிழர்"தான் முத்தமிழரா?

★ தமிழைமட்டும் முத்தமிழ் என்பதேன்?

★ முத்தமிழ்மட்டும் கலைகளானதேன்?

உலகின் ஐந்து மாகடல்களிலும் உயிர் மாகடல்கள் ஆகிய அத்லாந்திக், பசிபிக், குமரிமாகடல் என்ற மூன்றில் நடுநாயகமான குமரிமாகடலின் மணி முடிப்பதக்கமாய் விளங்குவது இலங்கைத்தீவம். தமிழர் வாழும் பல நிலங்களுக்கும் அவற்றினை இணைக்கும் தமிழ் மாகடலுக்கும் உயிர்மையமாக அது அமைந்துள்ளது. அத்துடன் தமிழ்மொழியின் தாயகம் இன்று இலங்கையின் வடக்கு, வடகிழக்குப் பகுதியிலும், குமரிக்கடற்காலின் வடக்கே தென்னகத்தின் தெற்கு, தென்கிழக்குப் பகுதியிலுமாகப் பரந்து கிடக்கிறது. இராமாயண காலத்துக்குச் சற்று முற்பட்டுத்தான் தமிழ்த் தாயகத்தின் இவ்விருபகுதிகளும் தமிழ்க் கடற்காலால் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்சங்க, இடைச்சங்க ... களில் இரண்டும் ஒரே தமிழக ... ரே தென்னகத்தின் உயிர்ப் ... நிலவின. இன்றும் நில ... முறைச் சார்பில் இரண் ... வேறு நிலப்பகுதியா ... ம், தென் ஆசியாவில் ... ளம், தமிழ் சார்ந்த ... பரப்பு முழுவதையும் ... கலை நாகரிக மைய ... ங்களும் ஒன்றுபட்டு, ... து கைகோத்து நிலவுகின்றன. இவ்விணைக் கைகளின் வளையரவமாகவே கடலலைகளின் அரவமும், கடலின் சங்கொலிகளும் அமைகின்றன என்னலாம்.

தமிழினமும், தமிழ் சார்ந்த இனங்களில்ஒன்ருகிய சிங்களமும் ஒருங்கே வாழ்ந்துவரும் இத்தென்கடல் மணிப் பதக்கத்தின் நடுவே, உலகத் தலைநகரங்களில் ஒன்ருய் இலங்கும் கொழும்பு மாநகரில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலும் அது நடத்தும் தமிழ் விழாவிலும் பங்கு கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். நாகரிக உலகின் நிலநெறிகள், கடல் நெறிகள், வான்நெறிகள் ஆகிய மூவழிகளும் வந்து கலக்கும் இந் நகரிலிருந்து தமிழரின் இயல்நெறி, இசைநெறி, நாடகநெறி ஆகிய முந்நெறி சார்ந்த முத்தமிழும் முழங்குவது சாலப் பொருத்தமென்றே கருதுகிறேன்.

முத்தமிழ் என்ற இத்தொடர் உலக மொழிகளில் வேறெம் மொழிக்குமில்லாது தமிழுக்கு மட்டுமே தொல் மரபாக அமைந்த தொடராகும். காலத்தின் எல்லையிலிருந்து நம்மிடையே வந்து வழங்கும் இத்தொடர் நம் உள்ளத்தில் இன்னதென்று விவரிக்க வொண்ணுத பல இன்னுணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகின்றது; பல கருத்துக்களையும் அலைபாய விடுகின்றது. ஆயினும் அத்தொடரோடு அது குறிக்கும் மரபுப் பண்புகளையும் நாம் நம் வாழ்விலும் உலக வாழ்விலும் பரப்ப வேண்டுமாஞல், அத்தொடரின் பொருள் மரபிலும் கருத்தைச் செலுத்துதல் நன்று.

முத்தமிழ் என்ருல் என்ன?

முத்தமிழ் என்ற சொல்லை மூன்று தமிழ் என்று கொள்வதே இன்றையப் பெரும்பாலார் மரபும் கருத்தும் ஆகும். ஆயினும் கேரள நாட்டார் அதை நெடுங்காலமாகவே முன் - தமிழ் என்று பிரித்து, தென்னகத்தின் மொழி இன்றிருப்பதுபோலத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு முதலிய பல்வேறு மொழிகளாகப் பிரிவதற்கு முன் இருந்த தென்மொழி என்ற கருத்து அறிவித்துள்ளனர். இன்றையத் தமிழர் தம் பழய உறவினர்களான பிற தமிழினத்தவர்களிடமிருந்து பிரிவதற்கு முற்பட்ட தொல் பழங் காலத்திலிருந்து வந்துள்ள இந்த மரபுப் பொருளும் துச்சமாக விலக்கத்தக்கதன்று.

ஈழத்திலேயே, இந்நகரிலேயே இருந்து தமிழ்ப் பணியாற்றியுள்ள அறிஞர் கணபதிப் பிள்ளையவர்கள் மூன்ருவது ஒருவகைக் கருத்தையும் நமக்கு நினைவூட்டியுள்ளார். மூ-மு- என்ற சொற் பகுதிகளுக்கு மூன்று என்ற பொருளும் முன் என்ற பொருளும் மட்டுமன்றி மூவாப் பழமை என்ற குறிப்பும் உண்டு. அது தமிழகத்தின் மிகத் தொல் பழங்காலப் பெயராகிய 'மூ' என்பதன் வழி வந்தது என்ற அவர் கருதுகிருர். பண்டை முத்தமிழரசருள்ளும் தமிழுக்குத் தனிப்பட்ட சிறப்புத் தொடர்புடைய பாண்டியர் பெயரே பழமையானவர் என்ற பொருளுடையதாயிருந்ததென்பதையும், 'பழயர்' என்பதே அவர்கள் குடி மரபுப் பெயராயிருந்த தென்பதையும் இது நினைவூட்டுகிறது.

பண்டைப் பாண்டியர் பழம் பெயராகிய மூவர் என்ற சொல் அப்பழம் பெருங் குடி முப்பழங் குடிகளான பின்னும் அம்மூவரான மூவரையும் குறித்து வழங்கியதென்பது மிகப் பொருத்தமேயாகும். மூன்றுக்கும் பழமைக்கும் தெய்வத் தன்மைக்கும் உரிய தொடர்புகூட இதுவாகவே இருத்தல்கூடும் என்னலாம்.

முத்தமிழ் என்ற தொடரின் இம் மூன்று மரபுப் பொருள்களும் ஒன்றுடனென்று மாறுபடும் பொருள்களல்ல, மூன்றும் ஒரே பொருளின் மூன்று வகைதிரிபுகளே யாகும். முத்தமிழ் என்பது மூன்று தமிழ். ஆஞல் அது மூன்று தமிழாய் இலங்கிய காலம் முற்காலம். அதன் தொன் மூல மரபு முற்காலத்துக்கும் முற்பட்ட, பண்டைக் காலத்திலும் பழமைப்பட்டு விட்ட முதுபழங் காலம்-'மூ' என்ற சொல்லின் உயிர் முதல் சுட்டிக் காட்டும் காலமும் அதுவே.

இறைவனை நாம் 'மூவா முதல்' என்று கூறுகிறேம். நம் தமிழ்மொழி பண்டிருந்தே 'மூவா மொழி' என்றும், கன்னித் தமிழ்மொழி, கன்னித் தாய் மொழி என்றும் பெயர் தாங்கி வந்துள்ளது. 'மூ' என்ற சொல்லின் முப்பொருட்கும் முதலாய மூலப் பொருளை இது நமக்கு நினைப்பூட்டுகிறது. 'மூ' என்பது பழமையிற் பழமைமட்டுமல்ல. அதுவே புதுமையில் புதுமையும் ஆகும். பழமை மரபில் புதுமையையும், புதுமை மரபில் பழமையையும் இணைத்து 'மூதிளமை' யின் உயிர் மறை கண்ட மொழி தமிழ்-மூன்று தமிழும் ஒருங்கிணைந்த முற்பட்ட தமிழின் பழம் புதுப்பண்பு, 'மூதிளம்' பண்பு இதுவே!

பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரையார்
அவர்களது கொழும்புப் பேச்சு.

மூதறிஞர் காணரிய செய்தியைச் சில சமயம் முதிரா - இளம் பருவக் குழந்தை காணுமற் கண்டு, கூருமற் கூறிவிடுவதுண்டு. 'முத்தமிழ்' என்ற சொற்ருெடரை ஆராய்ந்த சில ஆராய்ச்சியாளரின் ஆய்வுரைகள் இதை நினைவூட்டுகின்றன. முத்தமிழ் என்ற தொடரும் முச்சங்கம் என்றதொடரும்தேவாரகாலத்திலிருந்து அதாவது கி. பி. 7-ம் நூற்ருண்டிலிருந்துதான் வழங்கி வருகின்றன. அதற்குமுந்திய வழக்கு நமக்கு வந்து எட்டவில்லை என்பதைக் காலஞ்சென்ற அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் குறித்துள்ளார்கள். ஆம்! முத்தமிழ் முன்தமிழ் ஆனபின், முச்சங்க வாழ்வு முடிவுற்றபின்தான் அது கட்டி வழங்கப்பட வேண்டிய தேவை மிகுதியாக ஏற்பட்டது. நீரடியில் பிறந்து வாழும் மீன் வகைகள் நீர்ப் பரப்புக்குமேல் வந்தபின்தான் நீரைக் கண்ணுரக் காணமுடியும்? காட்சிப் பொருளே காட்சியின் ஊடுபொருளாயிருக்கும்போது அது காட்சிப் படுவது எங்ஙனம்?

முன் மூன்று தமிழாயிருந்த தமிழ் இன்று ஒரு தமிழாகியுள்ளது. அது மட்டுமோ? முன் ஐந்து மொழிப் பரப்பிலும் அதற்கப்பாலும் பரவியிருந்த தமிழ் இன்று ஐந்தாகப் பிளவுற்று ஐந்தில் ஒன்ருகக் குறுகியுள்ளது. குறுகிப் பிளவுபட்டுள்ள தமிழின் அறிஞர் ஆரரய்ச்சிகள் எப்போதும் குறுகாத, பிளவுபடாத அகல் முழுத்தமிழ் மரபைச் சென்றெட்ட முடிவதில்லை என்பது இயல்பேயன்ருே?

நம் தற்காலத் தமிழ்மொழியைப் பார்க்கச் சங்ககால 'முன் தமிழ் மொழி' முழுமையும் அகற்சியும் மிக்கது. ஆஞல் சங்ககாலத் தமிழைப் பார்க்கச் சங்ககாலத்தினும் முற்பட்ட முதற் சங்கத்துக்கு முற்பட்ட காலத் தமிழும், தமிழகமும் இன்னும் விரிவும் முழுமையும் உடையது, அது 'மூ'த்தமிழ், மூவாத்தமிழின் முதல் வடிவம்! 'முதல்வன்' என்ற சொல் மரபிலேயே காலஞ்சென்ற திருத்தந்தை ஹீராஸ் இவ்வுண்மைகளைக் கண்டுள்ளார். இன்றைய நம் தமிழில் 'முதல்வன்' 'தலைவன்' என்பவை இரு வேறு சொற்களாக இயல்கின்றன. ஆஞல் நாலாயிர ஆண்டுகட்கு முற்பட்ட 'சிந்துவெளி' காலத் தமிழில், 'தலை' என்பது 'ஐ' விகுதி பெருமல் 'தல்' என்றே இயங்கிற்றென்றும், 'தலைவன்,' 'தல்வன்' என்று வழங்கியதாகவும் அவர் குறித்துள்ளார். முன்-தல்வனே முதல்வனுயிற்றென்பதை இது விளக்குகிறது. ஆகவே 'மூ' என்பது முதன்மை, முற்பட்ட தலைமை, சாவா நிலைகண்ட பழம் புதுமை, புதுப்புழமை என்ற கருத்துக்கள் தோன்றவைக்கின்றது.

(தொடரும்)

தில்லை வெளியிலே...

இரும்புப் பெட்டியின் இலட்சங்களும் இதயப் பேழையின் இலட்சியங்களும் எதிரெதிர் அணியில் மோதுகின்றன!

என்றும் வெல்லும் மக்கள் குரல்!

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு நலன் நாடும் நற்பணியை என்றும் மறந்ததில்லை; மக்கள் மன்றத்தில் தனக்குள்ள மதிப்பினைக் காத்திடவும் தவறியதில்லை என்பதனைத் தமிழகத்து அரசியல் மிகச் சிறப்பான முறையில் அறிந்துள்ளது. ஆனால் இந்த உண்மையினைக் குறைவான தங்களின் அரசியல் அறிவினைக் கொண்டு கணக்கிடுகின்ற காங்கிரஸ்காரர்கள் புரிந்துகொள்ளாததும் விந்தையாகவே உள்ளது. உலகம் போற்றும் தலைவனைக் கொண்ட ஒரு கிழட்டுக் கட்சிதான், விடுதலை இயக்கமென எதிரியும் ஒப்புக்கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவறான முறையில் அளவிட்டு "மைனர்களின் கூடாரம்" எனச் சொல்லித் திரிகிறது. காங்கிரசுக்காரர்கள் தங்களுக்குள்ள விரிவான தேசியத் தன்மையை, தத்துவங்களிலே கொண்டுள்ள தரித்திரப் போக்கை உலகச் சந்தையிலே விற்பதற்கு எத்தனையோ விதவிதமான, வகை வகையான, வழிகளையும் வகை முறைகளையும் வலியுறுத்தித் தெரிவிக்கிறார்கள். காந்தியார் கனவு கண்ட இராமராச்சியம் இப்படித்தான் இருக்குமென்று சொல்லிடும் காங்கிரசு அமைச்சர்கள்தான், தங்களின் கடமையைத் துறந்து கண்ணியத்தை இழந்து வாழ்ந்து வருகிறார்கள். காந்தியாரைக் காட்சிப் பொருளாக்கி, அவரது இலட்சியக் கொள்கைகளை விற்பனைப் பொருளாக்கிப் பதவிவேட்டைக்குப் பணயமாக்கிவிட்டார்கள். பழையகாங்கிரசுக்காரர்கள்–புதுக் காங்கிரசுக்காரர்கள் என்று வகுத்தும் பிரித்தும், மண்டலக் குழுக்களை அமைத்துக்கொள்வது, காங்கிரசு கட்சியிலே மட்டும் இருக்கத்தக்க நிலையாகிவிட்டது. ஏக இந்தியாவையும் பாரதமாதாவையும் மறந்திடாத காங்கிரசுக்காரர்களின் உதடுகள் சொல்கின்ற கருத்துக்களை உள்ளம் ஏற்றுக்கொள்வதில்லை! ஊருக்கு ஊர் தேசியக் காங்கிரசின் தொண்டர்கள் கொடியேந்திக் கூவி, பிரிவினை வாதிகளைக் கைக்கூலியெனச் சொல்லிவிடுவது தமிழகத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சி. ஆனால் வடநாட்டில் இருக்கிற கதராடைக் கனவான்கள் ஏக இந்தியத் தத்துவத்தை எப்போதோ வெகு நாட்களுக்கு முன்பே ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள். அகில இந்திய காங்கிரசின் ஆணைகளுக்குக் கட்டுப்படாமல் சொந்த மாநிலப் பற்றினையும், ஆட்சிப் பிடிப்பினையும் விட்டுத் தராத கட்சிக் கமிட்டிகள் கணக்கின்றி காட்சி தருகின்றன. தென்னாட்டிலே இருக்கின்ற கன்னடக் காங்கிரசார், தமிழ்நாட்டுக் காங்கிரசார் சொல்லும் வழியிலே சென்றதில்லை. கேரளக் காங்கிரசார்க்கு அகில இந்தியத் தலைவர்கள் அடங்கிப் போய்விட்டார்கள். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எத்தனையோ முரண்பாடுகள். ஆந்திரத்துச் சஞ்சீவக் காங்கிரசு கனவான்கள் உள்ளம் குமுறும் போதும் மத்திய ஆட்சியின் கொடுமையினைக் காண்கிற போதும் மத்திய சர்க்காரிலே இருக்கும் உயர்ந்த காங்கிரசுக்காரர்களைத்தான் உதவாக்கரைப் போக்கினர் என்று எடைபோடுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரசுக்காரர்களின் ஆணவப் போக்கினையும், அரசியல் போதையையும், அவர்தம் ஆட்சியின் அவல நிலையினையும் துணைக்கண்டத்தின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளையும் கணக்கிட்டே, தனது கருத்திற்கேற்ப எண்ணங்களைச் சொல்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கிற காங்கிரசார் கட்சியின் கொள்கைச் சிறப்புகளை உணர்ந்ததும், உணர்ந்த சிறப்பினைச் சொல்லி மகிழ்ந்ததும் பல்லாண்டுகளுக்கு முன்னே நடைபெற்ற நிகழ்ச்சிகளாகிவிட்டன. இப்போதெல்லாம் பேசுகின்ற நிரந்தர அமைச்சர்களும், எதிரியின் வகையில் அமைச்சரானவர்களும், அமைச்சர் பதவியை எதிர்பார்த்து ஏமாந்துவிட்டவர்களும், எப்படியாவது மந்திரி சபைக்குள்ளே நுழைந்து கொஞ்சகாலமாவது பதவியிலே இருந்துவிட வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருப்பவர்களும், காங்கிரசு சர்க்கார்களின் செயல்முறைகளைச் சொல்லிப் பெருமைப்படுகிறார்களே தவிர, தங்கள் கட்சியின் சாதனைகளைச் சொல்லி மக்களைச் சந்திக்க மறுக்கிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் இங்கேயுள்ள காங்கிரசு ஆட்சியாளரைப் பார்த்து, அமைச்சர்களைப் பார்த்து, உங்கள் திறமையின் அளவுகோல் என்ன என்று கேட்டால், பேசுகிற அமைச்சரானாலும் பேசாத அமைச்சரானாலும், எடுத்துக் காட்டுவதெல்லாம் ஐந்தாண்டுத் திட்டங்களைத்தான்! இவைகளைக் காங்கிரசுக்காரர்கள்தான் செய்ய முடியும்; செய்யவேண்டும் என்ற கட்டாயமில்லை. சர்க்காரின் திட்டங்கள் காங்கிரசு கட்சியின் கருவிகளாகிவிட்டன! காமராசரும் கக்கனும் சர்க்காரின் சாதனைகளைக் காட்டிப் பேசுவதைவிட தங்கள் கட்சியின் சாதனைகளைச் சொன்னால் அவர்களின் சேவைகளைக் கணக்கிடுவதற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும். சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் தருவது தமிழ்நாட்டுக் காங்கிரசாருக்குக் கசப்பாக இருக்கிறதே—ஏன்? தமிழ் மக்களின் நலனே காங்கிரசுக் கட்சியின் குறிக்கோள் எனப் பேசுகிற எந்தக் காங்கிரசு தரப்புத் தொண்டரும் சரி–தலைவரும் சரி–இன்றளவும் ஊமைகளாகவே இருக்கிறார்கள். முத்தமிழ் வித்தகரும் முதலமைச்சருமானவர், காமராசர். அகில இந்தியக் காங்கிரசு கமிட்டியின் பார்லிமெண்டரிக் குழுவில் அங்கம் வகிக்கும் அந்த அரசியல் மேதை, சட்டசபைகளில் பிடித்துத் தள்ளினால்கூட முன்வந்து பேச மறுக்கிற அந்த விருதை வீரர்தான், சாகடிக்கப்பட்ட சங்கரலிங்கனாரைச் சந்திக்க மறுத்தார். சரித்திரக் காடுகளிலே ஏற்பட்ட சாவுக் குகைகளின் சேதியையும், அவை விளைவித்த அரசியல் புயலையும் தெரிந்திராத அவர்தான், சாகசம் பேசி ஏளனச் சொற்களைத் தெரிவித்தார்! இந்த ஒரு தனி மனிதனின் விருப்பும் வெறுப்பும் தமிழகத்தையே மறக்கடித்துவிட்டதென்றால் காங்கிரசு கட்சியினை வேறு எந்த வகையில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமுடியும்?

திராவிட முன்னேற்றக் கழகம் கொள்கை வழி நின்று, கொள்கைகளை வகுத்துக் கொள்ளாமல் கோலோச்சுகின்ற கோமான்களான தமிழ்நாட்டுக் காங்கிரசாரிடம், "'தமிழ்நாடு' என்று பெயர்வைத்துக் கொள்ளக்கூடத் தகுதியற்ற நீங்கள் இன்னும் தமிழர்கள் என்ற உருவங்களாக இருந்தும் அந்த உணர்ச்சியையும் உயர்ந்த பண்பினையும் பெறவில்லையே?" எனப் பலமுறை கேட்டது, அந்தப் பழைய வினாவை இப்போதும் கேட்கின்றது. தமிழகத்துக்கு தங்களை விட்டால் வேறு எவருண்டு சேவை செய்ய? ஆட்சி நடத்த? என்றெல்லாம் பேசுகின்ற அமைச்சர்கள் தங்களின் சாதனைகளில் சொந்த நாட்டுப் பெயர் வைக்க மறந்துவிட்டவர்களாக இருப்பது ஏன்? வடநாட்டுத் தலைவர்களின் ஆணைக்கு அடங்கிவிட்டார்கள். இந்திராதேவியின் முகம் சுருங்கிவிடும்; நேருவின் புன்னகை மங்கிவிடும் என்ற பயத்தினால்தானே தமிழகத்தை மாற்றார்க்கு தந்திடும் போக்கில் நடமாடுகிறார்கள். மந்திரி சபை அமைப்பதற்குப் பல நாட்களுக்கு முன்பிருந்தே சொன்ன வாக்குறுதிகள் தமிழ்நாட்டுக் காங்கிரசார்க்கு நினைவிலே இருக்க முடியாதுதான் என்ற எண்ணத்தில், மீண்டும் ஓர் இடைத் தேர்தலுக்காக சிதம்பரத்தில் கழகத்தினை எதிர்த்துப் போட்டியிடும் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறோம். கேவலம்! பரிதாபத்துக்கும் அனுதாபத்துக்கும் உரிய வகையில் தன்னுடைய அதிகாரபூர்வமான அபேட்சகரைக்கூட இழந்துவிட்ட அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, இன்னொரு சுயேச்சையைத்தான் தன்னுடைய தத்துப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டுவிட்டது. சொந்த நாட்டுக்குத் 'தமிழ்நாடு' எனப் பெயர் வைக்காததுபோலவே தமிழகத்தின் தேவைகளையும் நலன்களையும் காங்கிரசுக்காரர்கள் திட்டமிட்டே தொலைத்து விட்டார்கள். இவைகளையெல்லாம் சிதம்பரம் தொகுதி இடைத்தேர்தலில் தோள் தட்டி ஆர்ப்பாட்டம் செய்யும் காங்கிரசாருக்கு நினைவூட்டி மக்கள் மன்றத்திற்கும் எடுத்துக் காட்ட வேண்டியது கழகத்தின் கடமையாகிறது! அறையிலே கிடந்து அல்லல்பட்டு, அவசர அவசரமாக அம்பலத்திலே வந்து ஆடுகின்ற பாரதத்துச் சொக்கலிங்கம் போன்ற சொரணை கெட்டவர்கள் இனிமேலாவது தம் தாழ் நிலையையும் கழகத்தின் உயர் தன்மையையும் உணரட்டும். புலவர் ஆறுமுகத்தை எதிர்க்கத்தக்கதோர் ஆள் கிடைக்காமல் போன திக்கற்றவர்கள்தான், இன்னொருவரை விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலைக்கு–இழி தன்மைக்கு இழுத்துச் செல்லப்பட்டவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தில்லையில் என்ன வேலை என்று கேட்டு எரிச்சல்பட்டுக்கொள்கிறார்கள். தங்களின் ஏமாளித்தனத்தை மீண்டும் மீண்டும் எண்ணிக் கலங்குகிறார்கள். ஏலாததையெல்லாம் சொல்லிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துணிந்து எதிர்த்துப் போட்டியிடுகிற காங்கிரசுக் கட்சி அப்படியொன்றும் அசைக்கமுடியாத இரும்புக்கோட்டையல்ல! கலகலத்துப்போன காங்கிரசுக் கோட்டையில், கழுதையாக இருந்தாலும் அபேட்சகராக நிறுத்தி எவரையும் தோற்கடிப்போம் என்று வாய்வீரம் பேசுகிற காங்கிரசுக்காரர்களை எங்கும் காணமுடியாது! கடந்த காலத் தேர்தல்களில் காமராசர்களும் மற்றவர்களும் எத்துணைத் தொல்லைப்பட்டார்கள் என்பதனை நாடும் நாமும் மறந்துவிட்டால்கூட அவர்கள் மறக்கவில்லை! முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திற்கு வந்துவிட்ட வேளையிலிருந்து சாதாரணப் பஞ்சாயத்துப் போர்டுகளின் ஓட்டு வேட்டைக்குக்கூட மந்திரிகள் ஏறாத வீடுகளின் படியெல்லாம் ஏறி இறங்குகிறார்கள்; காணத் தகாதவர்களையெல்லாம் காண்கிறார்கள். திமிர் நடைபோட்டவர்கள், நேராகப் பார்க்க நினைக்காதவர்கள், துன்பப்பட்ட மக்களைச் சந்திக்க மறுத்தவர்கள், சந்துமுனைகளிலே

கடலரசன்

கூட நின்று தங்களின் வீரத்தன்மைகளைத் தெரிவிக்கத் துடிக்கிறார்கள். காங்கிரசு கட்சியின் தேர்தல் வெற்றி முழக்கம் முன்பெல்லாம் கேட்டதென்றால், விடுதலை பெறாத இந்தியா இருந்த நாட்களில் மக்கள் தொண்டர்கள் என்ற முத்திரை பெற்றவர்கள்தான் முன்னணியில் இருப்பார்கள். இப்போதெல்லாம் மந்திரிக்கு வேண்டியவர்கள் அகில இந்தியத் தலைவர்களுக்குத் தெரிந்தவர்கள். "இந்தத் தேர்தலுக்கு இவ்வளவு தருகிறேன். அடுத்த தேர்தலுக்கும் தருவேன். அதற்குமுன்னதாக இப்போதே பாதி தருகிறேன" என்பன போன்ற பேரப் பேச்சுக்களுக்குப் பிறகு சோரம் போகிறவர்கள்தான், காங்கிரசுக் கட்சியின் தேர்தல் படை வரிசையில் முதலிடம் பெறுகிறார்கள்! "நாங்கள் வீட்டிலே இருந்துவிடுவோம். நாட்டிலே நடைபெறும் தேர்தலில் மக்கள் எங்கள் தொண்டுகளை சர்க்காரின் சாதனைகளைக் கொண்டு மதிப்பிட்டு ஓட்டளிப்பீர்" என்று துணிந்து பேசக்கூடிய மந்திரிகள் எவரேனும் இருந்தால், பொதுமக்களிடத்திலே இவர்களுக்கும் கொஞ்சம் நம்பிக்கை உள்ளதெனச் சொல்லலாம்!

— 8-ம் பக்கம் —

சிலப்பதிகாரத்தில் சேர்க்கையா?

அ. அறிவொளி, கரந்தை.

கடந்த 26-9-'59-ம் நாள் "தென்றல்" கிழமையேட்டில் இராம. இராமநாதன் பி. ஏ. (ஆனர்சு) என்பார் "சிலப்பதிகாரத்தில் வெண்பா"—என்றெழுதிய கட்டுரையைத் தமிழுலகம் நன்கறிந்திருக்கக்கூடும்.

அக்கட்டுரையில்:

மெய்யிற் பொடியும்
 விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும்
 கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக்
 காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான்
 உயிர்"

என்ற வெண்பாவை வைத்துக்கொண்டு, இதற்கும் இன்னபிற சிலப்பதிகார வெண்பாக்களுக்கும் இளங்கோவடிகளுக்கும் தொடர்புண்டா என்பதையே ஆராய்கின்றார்.

உண்மையில் இதற்கும் இளங்கோவடிகளுக்கும் தொடர்புண்டு. ஆனால் மற்றைய வெண்பாக்களை அறிவுலகம் இன்னும் ஆய்தல் வேண்டும். அவைகளைப்பற்றிய உண்மைச் சான்றுகளும் சிலப்பதிகாரத்திலேயே உள.

இளங்கோ எழுதவில்லை என்று சொல்லும் கட்டுரையாளர் வழக்குரை காதைக்கும் வெண்பாவிற்கும் முரண்பாடு இருப்பதாக வாதிக்கிறார். அங்ஙனம் முரண்பாடு எங்குமே இல்லை. எங்ஙனமெனில் கட்டுரையாளரவர்கள் "'கண்ணகியின் தோற்றத்தைக் கண்ட அளவிலேயே மன்னன் மனம் தோற்றது' என்று வெண்பா கூறுகிறதே அப்படி மன்னன் நடக்கவில்லையே?" என்கிறார். இதற்கு அவரின் சான்று வருமாறு:—

"நீர்வார் கண்ணை! எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக்கொடியோய்" என்று இயல்பாகவே தான் கேட்டானும். பிறகு அவள், "உன்னிடத்துக் கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி யான்" என்று கூறியதும் மன்னவன் "கள்வனைக் கொன்றது கடிய செயல் அல்ல" என்று கூறினானும். இவ்விடத்தில் கட்டுரையாளர் கேட்கிறார், "கண்ணகியின் உருவத்தைக் கண்ட அளவிலேயே தோற்றிருப்பானேயானால் கள்வனைக் கொல்லுதல் கொடிய செயல் அன்று என்றெல்லாம் விளக்கம் கூறிக்கொண்டிருக்கமாட்டானே. நரம்பு தளர நாடி சோர நினைவின்றி நீள் நிலத்தில் விழுந்திருப்பானே!" என்று வாதிக்கிறார். இங்கேதான் கட்டுரையாளரின் கவனம் குறைகின்றது.

மன்னவனோ கோவலனைக் கொன்றது குற்றமல்ல என்று நினைக்கிறான். கோவலன் மனைவியோ, கோவலனைக் கொன்றது குற்றந்தான் என்று வாதாடுகிறாள். இரண்டு பேரும் வாய் மூலமாகவேதான் ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருந்தனர். சிலம்பு இன்னும் உடைக்கப்படவில்லை. கொற்றவனின் செயல் குற்றமா? குற்றமற்றதா? என்று இன்னும் சான்று காட்டி நிறுவப்படவில்லை. இந்த நிலையிலே ஒரு நெறி தவறாத மன்னன் திரு. இராமநாதன் கூறுவதுபோல, விழுந்திருக்கக்கூடாது. அப்படி நடந்தால் அவனைத் 'தேரா மன்னன்' என்று நாமும் சொல்லிவிடுவோம். அதனாலேதான் விழவில்லை.

மேலும், தான் கொன்றது முறைதான் என்று பாண்டியன் கூறுகிறானே—அவன் கண்ணகியைக் கண்ட அளவிலேயே மனம் தோற்றானா? இல்லையா? என்று கேட்டால் உண்மையிலேயே தோற்றான் என்பதுதான். எப்படியென்றால் முதலிலேயே அவளைக் கண்டு மன்னன் அஞ்சினான். ஆனாலும் அஞ்சாமை அரசனுக்குத் தேவை அல்லவா? அதை வலிவாக நினைத்து அச்சத்தைக் காட்டாது "நீ யாரம்மா" என்று கேட்டான். "நீ கொன்றாயே கோவலன்-அவன் மனைவி நான்" என்று கண்ணகி கூறியதும் அச்சம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. ஆனாலும் தன் செயலைக் குற்றமென்று கூறும் அவள் வாய்ச் சொல்லாலேயே இன்னும் ஆராய்வோம் என்று கருதித்தான் கள்வனைக் கொல்லுதல் கடியதல்ல என்று கூறிப் பார்த்தான். இருந்தாலும் அவனையுமறியாமல் அச்ச உணர்ச்சி அவன் சொற்களிலே எங்கிருந்தோ வந்து குவிந்துவிடுகிறது.

அதனால் "மடக்கொடியோய்" என்று முதலில் பொதுவாகவே அழைத்த மன்னன், இப்போது "பெண்ணணங்கே!" என்றழைக்கிறான். இது ஏன்? செய்யுளிலே இசை நிரப்பவா? அப்படியாயின், "பெண்ணியலே!" "பெண்கொடியே" என்றழைத்திருக்கலாமே! ஆனால் தெய்வத் தன்மை வாய்ந்த பெண்ணே எனவும் வருத்தம் தரும் பெண்ணே எனவும் பொருள்படும்படி பெண்ணணங்கே என அழைத்தது பாண்டியனுடைய நடுக்கத்தையே காட்டுகிறது. இதை மறக்க யாரே உளர்?

மேலும், அடுத்த விடையில் கண்ணகி என்னுடைய சிலம்பில் மணிகளாலான பரல்களே இருக்கின்றன என்று கூறியதும் பாண்டியன் தேமொழியே என்று அவளை அழைத்து கூறியது செவ்வையான மொழிதான். "என்னுடைய சிலம்புகளிலே மணிகளில்லை முத்துக்கள்தான் உண்டு" என்று கூறித் தான் இன்பமடைகிறான். இதைப் பலகாலும் பயின்றவர் உண்மை அறியலாம்.

கண்டவுடனேயே மடக்கொடி என்றவன் பிறகு பெண்ணணங்கென்றும் இப்போது தேமொழி என்றும் அழைப்பதற்குக் காரணம் அவனுடைய உள்ளம் அப்போதுதான் அமைதியுற்றிருக்கிறது. எப்படி என்றால் "என்னுடைய சிலம்பிலே மணி இருக்கிற"தென்று கூறியதனால் அந்தக் கண்ணகியின் கணவனாகிய கோவலனும் மணியுடைய சிலம்பைத்தான் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் தான் கொன்ற கோவலன் முத்தினையுடைய தேவியின் சிலம்பைத் திருடினான் என்று பொற்கொல்லன் சொன்னதனால் இந்தக் கோவலன் முத்துடைய சிலம்பைத்தான் கொண்டு வந்திருக்க வேண்டும். ஆகவே கொல்லப்பட்ட கோவலன் மணியுடைய சிலம்பைக் கொண்டு வரவில்லை. எனவே மணியுடைய சிலம்பைக் கொண்டு வந்த கோவலனைக் கொன்றாயே என்றுசொல்லி கண்ணகியாலே குற்றம் சாட்ட முடியாது என்றெல்லாம் எண்ணி, நாம் நீதியிலே தவறவில்லை என்று அவன் மகிழ்ந்தது, மணியுடைய சிலம்பைப்பற்றிக் கண்ணகி கூறிய பிறகுதான். இதைக் காட்டுவதற்காகவே வயிற்றில் பாலை வார்த்தாயே என்று கூறுவதுபோல் தேமொழியே என்று இரங்கிக் கூறினான். இப்படி நடுங்கியும் தெளிந்தும் அவளை அழைக்கின்ற முறை பாண்டியனுடைய மனத்திலே நடந்த ஒரு பெரிய போராட்டத்தை நமக்குக் காட்டுகிறது. இதனால் கண்ட அளவிலேயே தோற்றது உண்மை என்பதைக் காண்க.

இனி, கண்ணகியின் சொல்லை செவியிலே உண்ட அளவில் உயிர் துறந்ததை ஆராய்வோம். கண்ணகி உடைத்த சிலம்பிலே இருந்த மணி மன்னவன் வாயில் தெறித்ததும் இறந்தானென்பது வழக்குரை காதையிலே இருக்கிறது. வெண்பாவிலோ கண்ணகியின் சொல்லை உண்ட அளவிலேயே இறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இங்கே கட்டுரையாளர், "மணி கண்டுதானே மன்னன் இறந்தான். சொல்லைக் கேட்டு மடியவில்லையே?" என்கிறார்.

"அவ்வளவில் நடந்தது - அப்போதே உண்டானது உடனேயே பற்றியது" என்பனபோன்ற சொற்றொடர் அமைப்புகள் இலக்கியத்திலே விரைவைக் குறிப்பதற்காக வருவதாகும். அப்போதே உண்டானது என்று இலக்கியத்தில் எங்கேயாவது கண்டால் அந்த ஆசிரியரிடம் உடனே போய், "ஏனய்யா, அப்போதே என்று நுணுக்கமாக எழுதியிருக்கிறீரே! காலத்தை எந்தக் கருவியாலே அளந்தீர்?" என்று கேட்பது அறிவுடைமையாகாது.

"புல்லிக் கிடந்தேன்
 புடைபெயர்ந்தேன்
 அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே
 பசப்பு"

என்கிறார் திருவள்ளுவர். அணைத்துக் கிடந்தவள் தன்னை அறியாமலேயே சிறிது புரண்டு படுக்க, அந்த அளவிலேயே அள்ளிக் கொள்வதுபோல பசப்பு வந்து செறிந்ததாம். இது உண்மையா? இப்படி எந்தப் பெண்ணுக்காவது ஏற்படுமா? ஆனால் அதற்காக திருவள்ளுவரைத் தான் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தமுடியுமா? முடியாது. காரணம் அது பண்டையில் பயின்ற பைந்தமிழ் மரபு.

மேலும், உண்ட அளவே தோற்றான் உயிர் என்றால் விரைவாக உயிர் போயிற்று என்பதன்றி, உடனே போனதாகப் பொருளல்ல. தோற்றான் என்று இறந்த காலத்திலே குறிப்பது, "வாராக் காலத்தும் நிகழும் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச் சொற் கிளவி இறந்த காலத்துக் குறிப்போடு கிளத்தல் - விரைந்த பொருளன என்மனார் புலவர்" என்ற தொல்காப்பிய விதிப்படி முறையாகும். தோற்றான் என்பதும் விரைவு கருதித்தான் அதை மேன்மேலும் வலியுறுத்த 'அளவே' என்ற ஒரு சொல்லையும் போட்டிருக்கிறார்.

இன்னும் "சொல் செவியில் உண்டளவே தோற்றான் உயிர்" என்ற அடியில் இருக்கின்ற உண்ட என்ற சொல்லின் நயம் எண்ண எண்ண இன்பத்தையும், உண்மையையும் தருகின்றது. உண்ணுதல் என்றால் வாயில் சுவைப்பதையல்ல; பற்களின் துணைகொண்டு அரைப்பதைத் தின்னுதல் என்றும் மெல்லுதல் என்றுந் தான் சொல்லுகின்றார்கள். உள்ளே செலுத்துவதைத்தான் உண்ணுதல் என்கிறார்கள். அதுபோல சொல்லை உண்டானென்றால் கையால் எடுத்து வாயில் போட்டு பற்களின் துணையால் மென்று பின் உட்செலுத்தும் முதனிலை தொடர்நிலைத் துணைகளைப்போல செவியால் கேட்டு, தெள்ளிய அறிவாகிய பற்களால் மனமாகிய கூடத்தில் மெல்லுதல்போலச் சிந்தித்து உட்செலுத்துவதுபோலச் செயல் புரிவதாகும். இப்படி மனக்கூடத்தின் கண்ணே கண்ணகியின் சொல்லை ஆராய்ந்து கொண்டிருக்கும்போது சிலம்பின் மணி வாயில் பட்டது. சான்று கண்டதும் மன்னவன் உயிரும் சாய்ந்து விழுகின்றது.

ஆனால் கட்டுரையாளர் "மணி கண்டுதானே மன்னன் இறந்தான். சொல் கேட்டு இல்லையே?" என்கிறார். ஆமாம், சொல்லைக் கேட்டு மடியவில்லை. சொல்லை உண்டுதான் மடிந்தான். கட்டுரையாளர் வழக்குரை காதைக்கும் வெண்பாவிற்கும் முரண்பாடு இருப்பதினாலும் பாண்டியனுடைய நேர்மைத்திறத்திற்கு இழுக்கு வருவதாகப் பாடுகிறது வெண்பா என்றும் சொல்லி இளங்கோவடிகள் அதனை இயற்றவில்லை என்கிறார். மேல் எழுதியதில் முரண்பாடின்மையாகிய உண்மையைக் காட்டினேம். அடுத்து நெடுஞ்செழியனின் நேர்மையைக் குறைக்கும் இடங்கள் யாவை என்று கட்டுரையாளர்மேல் நிறுத்தவே இல்லை. காரணம் நேர்மை குறைக்கப்படவில்லை.

"அஞ்சாமை ஈகையறிவூக்க" மென்ற திருக்குறளைக் கொண்டு "அரசனுக்கு அஞ்சாமை தேவையாயிற்றே? பாண்டியன் அஞ்சினான் என்பது வேந்தர்க்கியல்பல்லவே?" என்றால் "அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில்" - என்ற திருக்குறளின் படி அஞ்சினான் என்க.

— 11-ம் பக்கம் —

பழம்பாடல் வரிகளை எடுத்தாள்வது தவறு?

உலகில் என்றும் நின்று நிலைத்திருப்பன அறிவும் உணர்வும் எனும் இவை இரண்டே. இரண்டும் உலகியலின் இரு பக்கங்கள். ஒன்றைக் காணும்போது மற்றொன்றைக் காண முடியாது. அறிவின் நிலையிலே நிற்கையில் உணர்ச்சி புலனாகாது. உணர்வின் பிடியிலே இருக்கையில் அறிவு ஓங்காது; இரண்டும் தனித் தனி முனைகள். இவை இரண்டும் சேர்ந்தது தான் உலகம்.

உலகைப் புரிந்து கொண்டவனும் இவை இரண்டையும் ஒவ்வோர் அளவிற்காவது தெரிந்து வைத்திருக்கிறான் என்றுதான் பொருள். அறிவையும் உணர்வையும் அறியாத மண்டுகங்கள், "புலம்பும் செல்வர்"களாய்த் தான் உலகில் கிடந்து வயிறு எரிந்து புலம்பிக்கொண்டிருக்க வேண்டும்.

அறிவையும் உணர்வையும் கொண்டு இயங்குபவர்கள் மக்கள். அறிவையே நிலைக்களனாகக் கொள்பவன் தத்துவஞானி. உணர்வையே நிலையமாகக் கொள்பவர்கள் கலைஞர்கள்-குறிப்பாகக் கவிஞர்கள் எனவே, அறிவிற்குத் தத்துவ ஞானியும், உணர்விற்குக் கவிஞனும் மன்னர்கள் அறிஞனிடம் உணர்வே இராது என்றோ, கவிஞனிடம் அறிவே இராது என்றோ கொள்ளலாகாது. இருவரிடமும் அவை அளவில் இருக்கின்றன; ஆனால் மிகுதிக் கூறுகள் அறிஞனுக்கு அறிவாகவும், கவிஞனுக்கு உணர்வாகவும் இருக்கும்.

உணர்வை வைத்து எடைபோடும் போது அறிவின் சிறப்பு புலப்படும்; அறிவின் துணையோடு உணர்ச்சி செல்லும்போது அழகு தென்படும். இவை இரண்டும் உலகியலின் இரு பக்கங்கள் என்றேன். இவற்றின் உச்சியிற் சென்றோர்க்கு அனைத்தும் புலனும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இந்தப் புலன் தான், பேரறிஞர்களின் நூல்களிலும், பெருங்கவிஞர்களின் நூல்களிலும் ஒரே படித்தான கருத்துக்கள் இருப்பதற்குக் காரணம்.

குறிப்பிட்ட அளவு தொலை சென்றதும் அனைத்தையும் கண்டு சிந்திக்-கின்ற அவர்கள் குறிக்கையில், ஒப்புவமைகள் கிடைக்கின்றன. இந்த ஒப்புவமைகளில் இயல்பிலே அமை-வனவும் உண்டு; எடுத்தாளப்பட்டு அமைவனவும் உண்டு. கருத்தொற்றுமை சில நேரங்களில் வேறு சில ஒற்றுமைகளையும் காட்டும்; எடுத்தாளுவது மொழியொற்று-மையைக் காட்டும். இத்தகைய ஒற்றுமைகள் சிலவற்றை ஆராய்வது தான் இக்கட்டுரை.

கருத்தொற்றுமையை வைத்துக் கொண்டு ஒருவனைக் கள்ளன் என்றும், களவாணி என்றும் சொல்வது தமிழகத்திலே இன்று இருந்து வருகிறது; இது அறிவுடைமையன்று.

முன்னவனின் கருத்தை வலியுறுத்தவும் ஒன்றை எடுத்தாளுவதுண்டு; முன்னவன் கருத்தின் பெருமையை எடுத்து உரைக்கவும் ஆளுவதுண்டு; அல்லது அவனை மதிப்பதனால் தான் மதிப்பைப் பெறவும் எடுத்தாளக் காணலாம்; அல்லது அந்த முன்னவனின் கருத்தையே தன் கற்பனையழகால், சொல்லாட்சித் திறத்தால் சிறக்கச் செய்யவும் எடுத்தாளக் காணலாம்; அல்லது தனக்கு முன்னிருந்த அந்தப் பெரியவனின் தரத்தொடு தன் தரத்தை ஒப்பிட்டுக் காண்பதற்கும் எடுத்தாளலாம்.

எடுத்தாளுவது தவறு என்று சொல்லிக்கொண்டு தம், அறியாமையையும் பொறுமையையும் புலப்படுத்திக்கொள்பவர்கள், இந்த உலகில் வாழக் கூடியவர்களே அல்லர். தாம் மட்டுமே அறிந்ததுபோலவும் பிறரெல்லாம் அறிவிலிகள்போலவும் எண்ணிக்கொண்டு, காழ்ச்சிந்தை மறச் செயலில் ஈடுபடுகின்ற இத்தகு கயவர்களின் போக்கு, நாட்டிற்கும் மொழிக்கும் ஏற்பட்ட கொள்ளை நோயைப் போன்றது. ஆனால் இந்த நோயே அழியும் விந்தையை நாம் காண்போம். இத்தகையவர்களின் முன்னால் ஒரு சில வரிகளை எழுதுகிறேன்.

முன்னோரின் அடிகளை எடுத்தாளுவது என்பது இன்று நேற்றல்ல, இந்தப் புலவரினம் தோன்றிய நாள் தொட்டே இருந்து வருகின்றது; எந்த மொழியிலும் இருந்து வருகின்றது சங்கப் புலவோராய் இருக்கட்டும், இடைக்காலத் தெய்வீகப் பழம் பாச்சைகளாய் இருக்கட்டும், அன்றி இக்கால மறுமலர்ச்சிக் கவிஞர்களாய் இருக்கட்டும், யாரேயாயினும் தாம் போற்றும் முன்னோரின் கவிதை வரிகளை எடுத்தாளுவது இயல்பாக, வழக்கமாக இருந்து வருகின்றது. இருவருக்குமே அச் செயல் பெருமை தருவதாக மட்டுமல்ல, புகழ் சேர்ப்பதாகவும் கருதப் படுகிறது. இப்படியிருக்க, இதையெப்படித் தவறென்று ஒரு சிலர் கதைக்கமுடியும்?

கட்டுரைகள் எழுதுகையில், மேற்கோள் என்று ஒன்றைக் கையாளும் போது, மேற்கோட் குறி இடுவதோடல்லாமல், சொன்னவர் யார், சொல்லப்பட்ட இடம் எது என்பன போன்ற பிறவற்றையும் குறிக்கின்றோம். ஆனால் கவிதையில் இந்நிலை மாறுபட்ட தன்மை கொண்டது.

கவிதை, சொல்லின் பெருக்கத்துக்காக எழுதப்படுவதல்ல; சொல்லின் சுருக்கத்துக்காகவே. மொழியின் நுண்மையை - வளத்தை அறிவிக்க இயல்வது கவிதை. கட்டுரையில் இடுவதுபோன்ற இடு குறிகளைக் கவிதையில் இடுவதில்லை; எனவே சிறப்பாகத் தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆனால், பலவற்றையும் படித்த 'பண்டிதன்', வெகு விரைவில் எந்த அடி எப்படி, யாரால், எங்கே, எந்த இலக்கியத்தில், எவ்வாறு கையாளப்பட்டது என்பதையும் சொல்லி; கூட்டியோ குறைத்தோ எடுத்தாளப் பட்டிருந்தால் அதையும் விளக்கி விடுவான். உண்மையிலேயே நோக்கும்போது, எடுத்தாளப்படும் அடி பொன்தட்டிலே எடுத்து வைத்து இழைக்கப்படுகின்ற வைரமணி போன்றது. இதுதான் உண்மையும் கூட. இந்த எண்ணத்திலேதான் கவிஞர்கள தம் முன்னோரின் பாடலடிகளை எடுத்தாண்டு தம் பெருமையையும் இலக்கிய அறிவையும் வளர்த்துக்கொள்கின்றனர்.

இப்படி எடுத்தாளுவது இலக்கணத்திற்கும் உடன்பாடே என்பதை நன்னூல் 9-ம் நூற்பாவினால் அறிந்து கொள்ளலாம். "முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" எனும் இந்த அடிகளில் பின்னது சிந்தித்தற்குரியது. கருத்தை மட்டுமல்ல, அந்தச் சொற்களையும் அப்படியே எடுத்தாளுவோம் என்பதற்கு இது வழி வகுக்கின்றது. சிலர் இதனை வழி நூல், சார்பு நூலுக்கு இலக்கணம் என்று சொல்லக்கூடும். இதை நான் மறுக்கவில்லை. ஒருவகையில் பார்க்கையில் மேற்கோளாக எடுத்தாளும் போதே அது அந்த அளவுமட்டிலும், வழி நூலாகவேதானே ஆகிவிடுகின்றது! ஏழுவகை மதங்களிலும் ஒன்றனுக்கு அடங்குதற்கு மேற்கோளாக, எடுத்தாளுவது வேண்டும் ஆகலானும், பத்தழகிலே பத்தாவது அழகான 'விளங்கு உதாரணத்தது ஆதல், வேண்டுமாயின் எடுத்தாளத்தான் வேண்டும் ஆகலானும், முப்பத்திரண்டு உத்திகளில், தானெடுத்து மொழிதலுக்கும், பிறன்கோட் கூறலுக்கும், இன்ன பிறவற்றிற்கும் எடுத்தாளுவது இன்றியமையாதது ஆகலானும் எடுத்தாளுவது தவறு அல்ல. இதனை இலக்கணமே வற்புறுத்தி 'இலக்கணச் சூத்திரங்கள்' வகுப்பதனாலும் அறிகின்றோம்.

எடுத்தாளுவது தவறில்லை என்பது தெளிவாகிவிட்ட காரணத்தினால், இனி, இப்படி எடுத்தாளப்பட்ட இலக்கியங்களையும் சான்றுகளையும் கண்டு செல்வோம்.

எடுத்தாளுதல் என்பது கருத்தை எடுத்தாளுதல், அடியை எடுத்தாளுதல், அடிகளை எடுத்தாளுதல், முழுப் பாடல்களையே எடுத்தாளுதல், சொல்லையும் சொற்களையும் எடுத்தாளுதல், புலவர்களைப் பாராட்டும் அடிகளாகவே எடுத்தாளுதல் என்று பல வகைப்படும். முதலில் புலவர்களைப் போற்றும் அடிகளையும், அடிகளாகவே எடுத்தாளப் பெறும் அடிகளையும் காண்போம்.

புலவர்களைப் போற்றுகையில் அவ்வப் புலவர்களின் உயரிய அடிகளையும், கருத்துக்களையும், செயல்களையும் சிறப்புப் பெயர்களையும் அடைகளாக வைத்துப் பாடுவது வழக்கம். இவ்வகையில் 'அறம் பாடிற்றே' என்னும் அடியும், செஞ்சொற் பொருள்' என்று திருக்குறளைச் சிறப்பிக்கும் நால்வர் நான் மணிமாலை அடியும், 'காதல்கூர் பனுவல் பாடும் கபிலனர்' என்னும் அடியும், 'உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்' என்னும் (78) அகநானூற்றின் அடியும், "நிலைத் தமிழின் தெய்வப் புலமைத் திருவள்ளுவர்" என்னும் அடியும், கொங்கண நாயனரின் வாலைக் கும்மியில் 70-ம் பாடல் அடியும், இன்னும் சிலவும் புலவரைப் போற்றுவன.

இனி, அடிகள் எடுத்தாளப்பட்ட சான்றுகளைக் காண்போம்.

1. அடிகள்...

அடிகளை எடுத்தாளும்போது முதலும் இடையும் இறுதியும் எனும் மூன்று இடங்களினும் செறித்து வைப்பது உண்டு. சிற்சிலர் ஒவ்வோர் அடியை எடுத்தாண்டு அதற்குக் காரண காரிய விளக்கமும் தருவார்கள். மற்றும் சிலர் அடிகளை எடுத்தாண்டு அவற்றின் சிறப்பை விளக்கிச் செல்வார்கள். இவற்றை ஆங்காங்கே வரும்போது விளக்குவோம். இனித் தலைப்பினுள் நுழைவோம்.

எட்டுத் தொகை இலக்கியத்துள் ஒன்றான கலித்தொகையின் 143-வது கலியிலே இரண்டடிகள் குறிப்பிடத்தக்கனவாக வருகின்றன. இவற்றிற்கும் பிற இலக்கியங்களுக்கும் இருக்கும் ஒற்றுமை வியத்தற்குரியது. அந்த அடிகளைப் பாருங்கள்.

— 10-ம் பக்கம் —

இக்கட்டுரைக்குப் பொருள் தந்த நூல்கள் :

திருக்குறள்	திருக்கோவை
அகநானூறு	திருவெங்கைக் கோவை
புறநானூறு	குலோத்துங்க சோழனுலா
கலித்தொகை	கந்தபுராணம்
நற்றிணை	சீகாளத்திப் புராணம்
குறுந்தொகை	திருவாய்மொழி
பதிற்றுப்பத்து	சம்பந்தர் தேவாரம்
பரிபாடல்	அப்பர் தேவாரம்
பொருநராற்றுப்படை	திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்
மலைபடுகடாம்	அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
பட்டினப்பாலை	சோணசைல மாலை
மதுரைக்காஞ்சி	நால்வர் நான்மணி மாலை
குறிஞ்சிப்பாட்டு	பிரபுலிங்க லீலை
முத்தொள்ளாயிரம்	திருப்புகழ்
சிலப்பதிகாரம்	திருக்களிற்றுப்படியார்
மணிமேகலை	நெஞ்சுவிடு தூது
சிந்தாமணி	குற்றாலக் குறவஞ்சி
பெருங்கதை	கொங்கணநாயனர் வாலைக்கும்மி
வளையாபதி	ஆத்திசூடி
சூளாமணி	இராவண காவியம்
கம்பராமாயணம்	நெருஞ்சிப் பழம்
நன்னூல்	Shakespeare
நாலடியார்	Tennyson
நைடதம்	Byron
நளவெண்பா	Southey
கலிங்கத்துப் பரணி	Ben Jonson
கச்சிக்கலம்பகம்	Lytle
தஞ்சைவாணன் கோவை	காளிதாசன்
அம்பிகாபதி கோவை	

புலவர் துரைமோகனன, வேலூர்.

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

காங்கிரசுக்காரர்களுக்குப் போட்டியில்லை என்ற செய்திகள் மிகப் பழையவைகளாகிவிட்டன, போட்டியிடக் கட்சிக்குச் சரியான ஆள் கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும் சிதம்பரத்தில் செல்லாக்காசானதுபோல, அடித்துத் தள்ளப்படுகிறார்கள்! தேர்தல் பிரச்சாரம் வெகு துரிதமாகவே வளர்ந்துவிட்டது, அதைக் காட்டிலும் மந்திரிகளின் பேச்சுக்களும் மிகத் துரிதமாகவே இருந்துவிட்டன! கழகத்தின் கேள்விகளுக்கு அவர்களிடத்திலே பதில் இல்லை. இருக்குமென எதிர்பார்ப்பது நம்முடைய தவறாகும். எனவே அவர்களுக்கும் நமக்கும் உள்ள கொள்கைச் சேதிகளைப்பொது மக்கள் இந்த நேரத்தில் எண்ணிட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் சிதம்பரம் துணைத்தேர்தலில் பங்கேற்கிறது; கழகம் அங்கில்லையென்றால், கழக அபேட்சகரின் போட்டியில்லை என்றால் காங்கிரசுக்காரர்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்கமாட்டார்கள். நாளை நடைபெற இருக்கும் வாக்குப் பதிவின் முடிவு, கழகத்தின் வெற்றிச் செய்தியைக் கொண்டுவரலாம்; அல்லது காங்கிரசு கட்சியின் சுவீகார அபேட்சகர் வென்றார் என்ற நிலையும் ஏற்படலாம்! காங்கிரசு கட்சி தன்னுடைய சர்க்காரின் திட்டங்கள் பற்றிய விவரங்களைத் தந்துவிட்டது. அமைச்சர்கள் தேர்தல் கூட்டங்களில் என்ன பேசவேண்டும் என்பதையே தெரிந்துகொள்ளாமல் சிதம்பரத்தில் போய், "திராவிட நாடு கிடைக்குமா? அண்ணாத்துரை அறிஞரா?" எனக் கேட்கிறார்கள்! கேட்டவர்கள் இந்த நாட்டு மந்திரிகளாக இருப்பதால் இந்தப் பொல்லாதவர்களை ஏற்றுக்கொண்ட சட்ட மன்றத்தின் பெருமைக்குப் பரிதாபப்பட வேண்டியுள்ளது. சிதம்பரம் துணைத்தேர்தலில் கழகம் போட்டியிடக் கூடாதென்றால் அதற்கான காரணங்களைச் சொல்லட்டும் காங்கிரஸ் தலைவர்கள். அந்தப்புரத்து அமைச்சர்கள் கழகத்திற்குத் தகுதியில்லை, கம்யூனிஸ்ட்களுக்கும் சோசலிஸ்ட்களுக்கும்தான் தகுதியுண்டு, அவர்களை, அந்த அகில இந்தியர்களை எதிர்க்கவேண்டிய நாங்கள் இந்தச் சிறிய கழகத்தினரை எப்படி எதிர்ப்போம் என்றுவது பேசட்டும்! சட்ட மன்றத் தேர்தலில் இடம் பெற்றுள்ள முன்னேற்றக் கழகம், சென்னை நகர சபைத் தேர்தலில் வெற்றிப் பண்பாடியிருப்பது உண்மை. இதனை உணராதவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பினைத் தந்து கழகத்தின் பலத்தினை உணர்த்தவும், கழகத்தின் பின்னே உள்ள மக்கள் சக்தியை மதிப்பிடவும் நாம் விரும்புகிறோம். காங்கிரசை எதிர்க்கத் தைரியமில்லாதவர்கள் ஏற்காடு மலையேறிப் போட்டியிடவில்லை. முன்னேற்றக் கழகம்தான் அந்த மலை முகட்டிலும் மூவர்ணக் காரர்களைத் திணற வைத்தது! திருவாடானையில் அரிவாள் சுத்திகளும் முன்னாள் சனநாயகங்களும், இப்போதைய சுதந்திராக்களும் காங்கிரசார்களைக் காட்டிலும் கேவலமாக மதிப்பிட்ட போதும் கழகம் தன் கடமையைச் செய்தது; காங்கிரசை எதிர்த்தது! சாமுவேலைத்தேடியெடுத்துப் பிடித்துக்கொண்ட தூத்துக்குடித் தேர்தல் மிகக் கடுமையான தேர்தலாக அமைந்தது. என்றாலும் கழகம் அயராது பாடுபட்டு, தனக்குள்ள கொள்கைகளை நிலைநாட்டிக் கொண்டது; காமராசரை அலைய வைத்தது.

திராவிட முன்னேற்றக் கழகம் சிதம்பரம் இடைத் தேர்தலை, கடந்த கால நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாகவே கணக்கிட்டுள்ளது. சென்னையிலே கிடைத்த வெற்றியிலே மகிழ்ந்தோ, பாண்டிச்சேரித் தேர்தல் தோல்வியினை மறந்துவிட்டோ, போட்டியிடவில்லை! வெற்றியையும் தோல்வியையும் பரிசாகத் தருகின்ற விசித்திரமான தேர்தல் விளையாட்டில் கழகம் பழக்கப்பட்டுவிட்டது. எனவேதான் கம்யூனிஸ்ட்களைப்போல், சோசலிஸ்ட்களைப்போல் வாய்ப்பு இருக்குமா இருக்காதா என்ற விசாரணையை ஒதுக்கி வைத்துவிட்டது. தமிழகத்திலே அமைந்துள்ள ஆட்சி, தனக்குள்ள தகுதிகளைப் பெற முடியவில்லை-மத்திய ஆட்சி பீடம் மாற்றாரிடம் இருப்பதால்! தென்னகம்-குறிப்பாகத் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது; உதைக்கப்படுகிறது, அகில இந்தியாவின் பெயரால், பாரதத்தின் பெயரால் காந்தியாரின் வாரிசான நேருவின் பெயரால், அற்பப் புகழால்! தமிழ்நாட்டின் சொந்த மொழி, தருக்கர் பலரால் தாழ்த்தப்படுகிறது. அதற்குள்ள பெருமைகளைப் பெற்றுத்தர சென்னை ஆட்சியாளர் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்! இங்கேயுள்ள மந்திரிகளின் சாதாரண ஆசைகளைக்கூட தில்லியிலேயுள்ள அரசு தள்ளிவிடுகிறது. கடைசியாகக் கிடைத்த பலமான அடி உணவு மண்டலத்தைத் தனித் தனியாக அமைக்க மறுத்துவிட்டதாகும். பரிதாபத்துக்குரிய பக்தவத்சலனார், பாரதத்தின் திருச்செல்வர் பக்கம் பக்கமாக அறிக்கைகளைத் தருகிறார். பம்பாய் நகரத்துப் பட்டேல் இப்போதைய உணவு அமைச்சர், பக்தவத்சலத்தைப் பார்த்து மிரட்டிப் பேசிப் பணிய வைத்திருக்கிறார்! உணவு மண்டலம்மட்டுமா-போலீசு கூட்டமைப்பு என்ற வலையிலும் கேரளத்து நம்பூதிரிபாத் மறுத்துவிட்ட பின்பும், சென்னை நகரத்து 'யுவ ராஜாக்களை'மட்டும் கன்னட-ஆந்திரத்துடன் இணைத்து வைத்துள்ளார்கள். இதனை எதிர்த்துக் கேட்பதற்கு சென்னை சர்க்கார் எனப்படும் பிராஞ்ச் ஆபீசிற்குத் தகுதியில்லை. இங்கேயுள்ள ஆட்சித் தலைவர்களுக்கு அந்தத் திறமையில்லை. இவர்கள் கேட்டு தில்லிக்காரர்கள் மறுத்துவிட்ட காரியங்களுக்கு எண்ணிக்கை அதிகம். அவை சுருக்கமாக விலக்க முடியாதவை! அத்தனையையும் தொகுத்துப் பார்த்துக் கணக்கிட்டால், காங்கிரசு கட்சி ஆட்சி பீடமேறவும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று பேசிக்கொள்ளவும் தகுதியற்ற நிலையிலே உள்ளது. "ஏமாந்த நேரத்திலே ஏற்றங்கொண்டவர்களாக இருக்கும் அவர்களுக்கு, ஏனிந்தத் தாழ்நிலை?" என எண்ணிப் பாராத ஏமாளித் தமிழர்கள் சிலர் துணையாக இருப்பதால் இந்தத் தகாத வாய்ப்பினைப் பெற்றுவிட்டார்கள்! மீண்டும் மக்கள் தவறாதிருக்கவும், காங்கிரசு கட்சியினரின் கேவல நிலைமை விளங்கவும், நமது கழகத்தின் கொள்கை விளக்கப் பணியாகத் தேர்தல் அமைகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தேர்தல் களத்திலேயிருந்து விலகிவிட வேண்டுமென்று சொல்லுபவர்கள், பாண்டிச்சேரியைக் காட்டி ஆறுதல் பெறுகிறார்கள். நாமும் சொல்லமுடியும், "சென்னையிலே தோற்றவர்கள் சிதம்பரத்திற்கு வராதீர்!" என்று. பொதுத்தேர்தலில் இந்த வேலை நடக்காது. அதுவும் முன்னேற்றக் கழகத்துடன்போட்டியைத் தவிர்க்க நினைப்பது மிகத் தவறாகும். மற்றக் கட்சிகள் இடந் தேடி அலைவது வழக்கம்; ஆளுக்கு ஆள் தேடுவதும் அவற்றின் பழக்கம்! கழகம் அப்படியல்ல. "கம்யூனிஸ்ட் கட்சியின் மிகப் பெரிய முதல் ரகத்து இரண்டாவது ரகத்துத் தலைவர்களான இராமமூர்த்தியாக இருந்தாலும் சீவானந்தமாக இருந்தாலும், நாகப்பட்டினம் தொகுதியில் நாஞ்சில் மனோகரனையும் நாகூர் அனீபாவையும் அபேட்சகராக வைத்து எதிர்க்க முடியும். வைத்தினாதய்யரின் தேசியத்தைச் சொத்தாக வைத்து எவர் நின்றாலும் சரி-எங்கள் முத்துவைக் கொண்டு உங்கள் முதுக்கெலும்பின் பலம் தெரிவோம்" எனச் செயலில் காட்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகும். அந்தப் படை அணியின் வரிசையில் நம் புலவர் ஆறுமுகம் அவர்கள் சிதம்பரம் தொகுதியில் இடம் பெறுகிறார். நாடகாசிரியர்கள் சட்டமன்றத்துக்கு வரலாமா, நடிகர் ராசேந்திரன் தேனிக் கலவரத் திருவாளரை எதிர்க்கலாமா என்றெல்லாம் முன்பு சொன்னவர்கள், புலவர், சட்டசபைக்கு வரலாமா என்பதாகக் கேட்டால் அவர்கள் பல வகைகளில் பரிசோதிக்கப்பபட வேண்டியவர்களே! நம்புலவர் சட்டமன்றம் சென்றால் சங்க இலக்கியப் பண்பும் மாண்பும் மிளிரச் செயல்படுவார்கள்! சட்டமன்றச் செயல் முறைகளில் அறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்திருக்கிற கண்ணியப்புகழும், கலைஞர் அவர்கள் வளர்த்துள்ள கலைமெருகும், நம் பேராசிரியர் தந்துள்ள சிக்கலான சொல்லலங்காரமும், புலவர் ஆறுமுகனார் சிறப்பினைக் கொண்டு முழக்க முழுக்கத் தமிழ் மணம் கமழலாம்; மகிழலாம்! இவையெல்லாம் காங்கிரசுக்காரர்களுக்குத் தேவையற்றவைகளாக இருக்கலாம், அவர்களிடத்திலே இவை இல்லாத காரணத்தினால். ஆனால் செந்தமிழ் நாட்டுச் சோதரரும் நல்லவரும் பெரியோரும் நம் உறுப்பினர்கள் பேசத் துவங்கி முடிக்கிறார்கள் என்றால் சட்டமன்றம் மட்டுமல்ல பார்வையாளர்கள் பகுதியும்கூடச் சேர்ந்து களிக்கிறது; இதற்குள் முடித்துவிட்டார்களே எனச் சங்கடப்படுகிறார்கள்! ஆனால் சந்தர்ப்பக் கோளாறுகளினால் முதலமைச்சராகியும், கட்சித் தலைவராகமுடியாத காமராசர் அவர்கள் சட்ட சபையில் ஒரு நிமிடம் ஒரே ஒரு செய்தியைப் பற்றிப் பேசினால்-அதுகூடத் தவறு; வாய் திறந்து இரண்டு வார்த்தைகள் சொன்னால் – காங்கிரசுக்காரர்களே வியப்படைகிறார்கள்! செய்தித்துறையினர் மூர்ச்சை அடைகிறார்கள். நாம், பேச வைத்த அன்பழகனாரைப் பாராட்டுகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடத்திலே இலட்சியங்கள் இருக்கின்றன; இலட்சங்கள் இல்லை! காங்கிரசுக்காரர்களிடத்திலே இலட்சியங்கள் இல்லை; இலட்சங்கள் இருக்கின்றன. கழகமும் காங்கிரசும் போட்டியிடுகின்றன என்றால் இரும்புப்பெட்டியிலே இருக்கின்ற இலட்சங்களும், இதயங்களிலே இருக்கின்ற இலட்சியங்களும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடுகின்றன என்றே தமிழ்நாட்டு அரசியல் அகராதி பொருள் தரும். இலட்சங்கள் எப்போதும் வெற்றியைப் பெறுவதில்லை. ஆனால் இலட்சியங்கள் என்றாவது ஒருநாள் வெற்றி பெற்றுவிடத் தவறியதில்லை. சிதம்பரத்தில் திராவிட நாட்டுப் பிரிவினையைச்சார்ந்தும் சேர்ந்தும்உள்ள கொள்கை விளக்கத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள், அது கற்பனை என்பார்கள். அமைச்சர்கள் அல்ல; எத்தனையோ கக்கன்களும் உண்டு! "சென்னை நகரசபையை நிர்வகிக்க முடியாதவர்கள் நாட்டை எப்படி ஆளப்போகிறார்களோ?"-இப்படியும் பேசுவார்கள் நிதி அமைச்சரல்ல; இங்கேயுள்ள எத்தனையோ சுப்பிரமணியங்கள். ஏழைகளிடம் வரியெடுத்துப் பணக்காரர்களுக்கு உறுதி தேடித் தருகிறது காங்கிரசு-சென்னை சர்க்கார்-தில்லி சர்க்கார்! திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலே இருக்கும் சென்னை மாநகராட்சிமன்றம், பெருஞ் செல்வந்தர்கள் இத்தனை நாள் தராமலிருந்த வரித்தொகையினைப்பெற்று, சென்னை நகரத்தில் தங்குமிடமற்ற பாதையோரத்துக் குடும்பங்களுக்குக் குடியிருப்புகளைத் தந்துள்ளது; தரப் போகிறது! இராசா சர் முத்தையாக்களை உறுப்பினராக வைத்துள்ள காங்கிரசு அமைச்சர்கள், அண்ணாமலை மன்றத்திற்கு சரியான வரி விதிக்கவில்லை. தி. மு. க. மேயர் தக்க விதத்தில் வரி விதித்தார்! பக்கிங்காம் கர்னாடிக்மில்ஸ் சொந்தக்காரர்கள் சர்க்காருக்கும் சொந்தக்காரர்கள்; அவர்களது கட்சிக்குச் சந்தா செலுத்துபவர்கள். ஆனால் முன்னேற்றக் கழகம் எந்த வகையான நலனையும் கருதாமல் நகரத்தின் நலன் கருதி அவர்களின் வரித்தொகை மூன்று இலட்சத்தை ஆறு இலட்சமாக்கியது! நகராட்சி மன்றத்தின் சில சான்றுகள், ஆட்சி மன்றம் கழகத்தின் கைக்கு வருகின்றபோது என்னென்ன சான்றாண்மைச் செயல்கள் வர இருக்கின்றன என்பதை முன்கூட்டிச் சொல்கின்றன. கழகத்தின் வளர்ச்சியினை மதிக்கவேண்டும் என்ற மனம் இல்லாதவர்கள், வளத்தினை வாழ்த்தவேண்டும் என விரும்பாதவர்கள் வசைமொழிகளைப் பரிசுகளாகத் தருகிறார்கள். அவர்கள் வாழ்க! வாழ்க! இந்த வாழ்த்தொலிகளை, சிதம்பரம் இடைத்தேர்தலில் கழக முரசொலிக்கும் தென்றல் நடைப் பெரும்புலவர் ஆறுமுகனார் அவர்கள், தென்னகத்து மன்றமேறிப் பெற்றிடும் வகையில், தில்லை நகர்ப் பகுதி கழகத்தவரும் தில்லை நகர்ப் பல்கலைக் கழக மாணவ நண்பர்களும் திராவிடப் பெருங்குடி மக்களும் செயல்பட வேண்டுகிறோம். நம் கழகத்தின் வெற்றிமுழக்கம் கேட்டுத் திராவிடம் மகிழட்டும்! ★

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை.

★ மூத்த தமிழிருக்க, முன்னேறும் நிலையிருக்க, எற்றுக்கோ இந்த நிலை? ஏனோ இந்த அவலக்காட்சி?

'**வை**யமீன்ற தொன் மக்கள் உள்ளத்தினைக் கையினாலுரைக் காலம் இரிந்திடப் பையநாவை அசைத்ததே'' நம்மொழி. மொழியே மனிதனின் முதல் தரமான கண்டு பிடிப்பு. இந்த மொழியிலேதான் நம்முடைய முன்னோர்கள் கண்டு பிடித்த உண்மைகள், அறிவுரைகள், பண்பாடு யாவும் உள்ளன. எனவே மொழி, கருத்தை வெளிப்படுத்தும் கருவிமட்டுமல்ல; பண்பாட்டை-மக்களின் நடை, உடை, நாகரிகத்தைப் பிரதிபலிக்கும் ஓர் சமதள ஆடியாகும் (Plain Mirror).

இங்ஙனம் நோக்கும் பொழுது "பயிற்சி மொழிச் சிக்கலின் சிறப்பும் உயரக் காண்கிறோம். கல்வியின் நோக்கம், மாணவ மாணவிகளுக்கு உண்மைகளைக் **கற்பித்தல் மட்டுமன்று; நாட்டின் பண்பாட்டைக் கற்பித்தலும் ஆகும்.** எதிர்கால நாட்டின் உண்மையான குடிமக்களை உண்டாக்குவதே கல்வியின் நோக்கமாகும். நாட்டுக்குரிய உயர்ந்த பண்பாட்டைக் கற்பிக்க அந்த நாட்டு மொழியே சிறந்தது என்பதில் ஐயமில்லை.

அங்ஙனமாயின் அந்தத் தாய் மொழி மூலமே எல்லாக் கல்வியையும் கற்பிக்க இயலுமா? ஆங்கிலத்தின் செல்வங்கள் யாவையும் தமிழிலே மொழி பெயர்த்தபின் தான் தாய் மொழியில் கற்பிக்க இயலுமா? அல்லது கற்பிக்க முயன்றால்தான் "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்'' தாய் மொழியில் பெயர்க்கப்படுமா? சிலர் தாய் மொழி வளம்பெற்ற பிறகே பயிற்சி மொழியாக வேண்டுமெனக் கூறுகிறார்கள். இங்ஙனம் கூறுபவர்கள், "சிறு குழந்தைகள் எழுந்து நின்று, நடைவண்டி பிடித்து குறுநடை நடந்து, நடை பயில்கிறதா?'' அல்லது "நடக்கக் கற்றுக்கொண்ட பிறகுதான் எழுந்து நிற்கிறதா?'' என்பதை சற்றுக் கவனிக்க வேண்டுகிறேன்.

தனித்து ஒரு நாடும் இயங்க இயலாத இந்நிலையில் ஆங்கிலம் உலகப் பொது மொழியாக விளங்குவது நன்மையே; ஆனால் எல்லோரும் ஆங்கிலத்தையே கற்றுக்கொண்டு, நம் தாய் மொழிகளையெல்லாம் அழித்துவிட இயலுமா? தாய் மொழியும் வளர்ச்சி பெற வேண்டுமன்றோ? தாய் மொழி மட்டும் அறிந்தவர்கள் மேனாட்டு அறிவியலின் அற்புதங்களை அறிந்து அதன் ஆனந்தத்தைப் பெற வேண்டாமோ?

எனவே, தாய் மொழி வளர்ச்சியடையவும், யாவரும் அறிவியல், பொருளாதார, அரசியல் அறிவு பெறவும், தாய் மொழியில் நூல்கள், கலைக் களஞ்சியங்கள் பலப்பல வெளி வர வேண்டும். தேவை இருந்தால் அல்லவோ இத்தகைய நூலகள் வெளி வர இயலும்? இந்தத் தேவையை உண்டாக்குவது பலகலைக் கழகத்தின் பொறுப்பே யன்றோ? எனவே "இன்று கல்லூரிகள் கற்பிக்கும் கருவிமொழியாக இருக்கும் ஆங்கிலத்தை, நீக்கிவிட்டு, அதனிடத்திலே தாய்மொழிகளை புகுத்தினால், தேவை உண்டாகும், ஏராளமான பாடப் புத்தகங்களும் தாய்மொழியில் உண்டாகும்'' என்பது காந்தியடிகள், தாகூர், பாரதியார், தமிழ்த்தந்தை திரு.வி.க., டாக்டர். மு. வ., நாமக்கல் இராமலிங்கம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இன்னும் பலப் பல அறிஞர்களின் கருத்தாகும். அண்மையில் நமது நிதிஅமைச்சர் திரு. சுப்பிரமணியனார் அவர்கள்கூட இதை ஆதரித்து ஒரு சில கல்லூரிகளில் கொண்டுவர முயன்றுள்ளார்.

ஆங்கிலத்தின் இடத்தைத் தாய் மொழி அடைய இயலுமா? தாய் மொழிமூலம் கற்பித்தல் ஆங்கில மொழிமூலம் கற்பித்தலைவிட எந்த வரையில் சிந்தது? நம் தாய், தந்தையோடு பேசிய மொழியே தாய்மொழி. நாம் இந்த உலகில் உண்டாகக் காரணமாக இருந்த தாயின்மொழி, பிறகு நமது நாவை அசைத்து நம்மைப் பேச வைத்தது. நம் தாயானவள், "அப்பா, அக்கா'' என்ற சொற்கள் முதல் "நிலா நிலா ஓடிவா; நில்லாமல் ஓடிவா!'' என்பன போன்ற பாட்டுக்கள் வரை தாய்மொழியிலேயே கற்றுக்கொடுக்கிறாள். **உலகைப் பற்றியும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றிய முதல்அறிவும் தாய்மொழி மூலம்தான் நமது மூளைக்கு எட்டுகிறது.** நம்மை ஒரு தேள் கொட்டிவிட்டால், நாம் "ஐயோ, அம்மா, தேள்!'' எனத் தாய்மொழியிலே தான் நம் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துகிறோமே யொழிய, பிறர் மொழியிலே அல்ல. எனவே தாய்மொழிதான் நமது உள்ளத்தின் மொழி.

ஆங்கிலத்திலே அடுக்குமொழியிலே பேசும், ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாத பெரியவர்கள்கூட, முதன் முதலில் தாய்மொழியில் சிந்தித்துப் பிறகுதான், தம் எண்ணங்களை ஆங்கில மொழியில் பேசுகிறார்கள். அதேபோல் கல்லூரி அறிவியல் ஆசிரியர்களில் பலர்கூட அறிவியல் பாடங்களை ஆங்கிலத்திலே படித்து, அதைத்தன் தாய்மொழியிலே சிந்தித்துப் புரிந்துகொண்ட பிறகு தான் புரிந்துகொண்ட கருத்துக்களை, ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் கூறும் ஆங்கிலப் பேச்சைக் கேட்டுத் தம் மனத்தினுள் தாய்மொழியிலே மொழிபெயர்த்துப் புரிந்துகொள்கிறார்கள். இங்ஙனம் தாய்மொழியில் மொழிபெயர்த்து புரிந்துகொண்ட இதே கல்லூரி மாணவிகள் மறுபடியும் தேர்வில் அவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதவேண்டியிருக்கிறது. தாயமொழி பேசும் கல்லூரி ஆசிரியர், தான் தாய்மொழியிலே புரிந்துகொண்ட கருத்துக்களை வேண்டுமானால் மொழிபெயர்க்க இயலாத ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்தி ஏன் தாய்மொழியிலேயே கற்பிக்கக்கூடாது?

திறமையான, தமிழறிவு படைத்த ஆசிரியர்களாயிருந்தால் "ரேடியோ'' எனக் கூறுவதற்குப் பதிலாக 'வானொலி'' என்றும் 'டெலிவிசன்'' எனக் கூறுவதற்குப் பதிலாக "வானொளி'' என்றும் மொழி பெயர்த்துக் கற்பிக்கலாம். இன்றேல் "ரேடியோ'' "டெலிவிசன்'' என்ற சொற்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதால் என்ன தீமை ஏற்பட்டுவிட முடியும்? ஏன்? ஆங்கில மொழி, இன்று கடன் வாங்கப்பட்ட சொற்களின் களஞ்சியமாகக்காட்சியளிக்கவில்லையா? எச்சரிக்கையாக கடன் வாங்குவதினால் மொழி குன்றாது; ஆனால் கடன் வாங்கப்பட்டச் சொற்களை அகராதியில் "திசைச்சொற்கள்'' என்ற தனி இடத்திலே வைத்தல் வேண்டும்.

கடன் வாங்காமல் தமிழ்மொழியில் பாடங்கள் கற்பிக்க இயலும். கணக்கில் வட்டத்தின் பரப்பளவைக் காண்பதற்கு அக்காலத்தில் "வட்டத் தரை (πxR) கொண்டு, விட்டத் தரை தாக்க (R) சட்டெனத் தோன்றுங்குழி (πR2) (வட்டத் தரை-சுற்றளவில் பாதி; விட்டத் தரை-ஆரம், (R) குழி-பரப்பு) எனத் தூய தமிழிலே மட்டுமல்ல, தமிழ்க் கவிதையிலே கற்பித்திருப்பதே இதற்கு சான்று கூறுமல்லவா? **அறிவியலையே தமிழ் மொழியில் கற்பிக்க இயலுமென்றால், வரலாற்றையும், ஆட்சிமுறை பற்றியும் இன்றும் ஏன் ஆங்கிலத்திலேயே கற்பிக்க வேண்டும்?**

உலகோடு கருத்து பரிமாறிக் கொள்ள இயலவில்லையே எனக் கவலைப்படலாம். இந்த இன்னலைத் தவிர்க்க ஆங்கில மொழியை "பயிற்சி மொழியாக'' இல்லாமல் "ஒரு விருப்பப் பாட மொழி'' என்ற அளவில் கற்பிக்கலாம். அறிவியலில் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்ய விரும்புவோர், மேனாடு செல்ல விரும்புவோர் யாவரும், ஆங்கிலம் கற்றுப் பயனடையலாம்.

உலகின் பொது மொழியே இந்தியாவின் பொது மொழியாக இருத்தல் நலமேயன்றோ? இங்ஙனம் ஏற்பட்டால் "இந்தியாவின் பொது மொழி'' என்ற பெயரில் இன்னொரு மொழிச் சுமையை பலர் தலையில் சுமத்துதல் வேண்டாமல்லவா?

வட நாட்டிற்கு வேலைக்குச் செல்லும் ஒருவருக்காகவும், வெளி நாடுகளுக்காகவும், ஒரே பொழுதில் மூன்று மொழிகளை கல்வி கற்கும் எல்லோர் தலையிலும் சுமத்துதல் நியாயமோ? மொழிகளைக் கற்றுக் கொள்ளவே 16 வயது வரையில் தன் வாழ்நாள் செலவிடும் இளைஞன் பிறகு எப்படி அறிவியல் ஆராய்ச்சி செய்ய இயலும்? உளநூல் கூற்றுப்படி 16 வயதுக்குப் பின்னால் ஒருவனின் அனுபவங்களின் அறிவு அதிகரித்தாலும் அறிவுக் கூர்மை (Intelligence) வளர்ச்சியடைவதில்லை. அதனால்தான் பாரதியார் கூட, உள்ளம் உருகி "வேறு வேறு பாஷைகள் கற்பாய்-நீ. வீட்டு வார்த்தை கற்கிலாய்-போ, போ போ'' எனப் பாடுகிறார். முன்னேறிய நாடுகளைப் பார்த்தாவது நம்மனப்பான்மை மாற வேண்டாமா? இன்று ஜப்பான், ருஷியா, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளிலே தாய்மொழிக்கு தரப்படுகிற மதிப்பைக் கண்டாவது நாம் நம் தாய் மொழிக்கு மதிப்பு கொடுக்க வேண்டாமா? இத்தாலி, ஜெர்மன், பிரான்சு, கனடா, பின்லாந்து போன்ற நாடுகளிலெல்லாம் ஆட்சி மொழி தாய் மொழியாக வன்றோ உள்ளது. எனவே தாய் மொழி மூலம் கற்பித்தால் மற்ற நாடுகளைப் போன்று நாமும் முன்னேற்றமடையலாம் என்பதில் ஐயமில்லை.

இன்று ஒரு துறையிலே சிறந்த அறிஞர்களாக விளங்குபவர்கள் தாய் மொழியிலே அறிவு குறைந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, தாய் மொழியில் கலைச் சொல் மழை பொழிய வைக்க, பிற நாட்டு நூல்கள் மொழி பெயர்க்கப்பட, ஒவ்வொரு துறையிலும் சிறப்புற்று விளங்குபவர்களுக்கு இலவசமாகத் தமிழ் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பளித்து, அவர்கள் மூலம் மொழி பெயர்த்தல் நல்லது. இன்றையச் சென்னைப் பல்கலைக் கழக அறிவியல் பட்டப் படிப்பு (பி. எஸ்சி.) மாணவர்களுக்குத் தமிழ் கிடையாது, அவர்களுக்கு அறிவியல் தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டுவதுடன் தமிழ் கட்டாய பாடமாகக் கற்பிக்க வேண்டும். அறிவியலிலும் தமிழிலும் வல்ல அறிஞர்கள் மாநாடுகள் பற்பல நடத்தியும், சிறந்த மொழி பெயர்ப்பு நூல்களுக்கும் சிறந்த கலைச் சொற்-பட்டியலுக்கும், பரிசுகள் வழங்கியும், **தமிழிலே ஆசிரியப் பயிற்சி இலவசமாக** அளித்தும், தாய் மொழியை வளர்த்தல் மிக மிக வேண்டியதாகும். **மீண்டும் மீண்டும் இக்கருத்தைக் கூறிக் குழப்பிக்கொண்டிருக்காமல் உடனடியாகச் செயல்பட முனைய வேண்டும்.**

ஆகவே அசைவிலா ஊக்கம் எடுத்துக்கொண்டு பல்கலைக் கழகங்களும், ஆட்சியாளர்களும், நாமும் தாய் மொழியை வளர்க்காவிட்டால் நாடு முன்னேற இயலாது. ஆன வழியெலாம் முயன்று, தமிழை, பாட மொழியாகக் கொணர்வோமாக.

-ஆரூர் ஆனந்தன்
பி. எஸ்சி., பி. டி.

அடுத்த இதழில்...

"'திருமதி' தமிழ்ச்சொல்லே!"

—பலமொழிப் புலவர்களின் கருத்துக்களைத் திரட்டித் தரும் கட்டுரை.

★

நண்பர்கட்கு...

இவ்விதழ், 12-ம் பக்கத்தில், பன்மொழிப்புலவரின் பேச்சு ஆறும் பக்கத்தில் வெளியாகியிருப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆறும் பக்கம் என்பதை, **நான்காம் பக்கம்** எனத் திருத்திக் கொள்க.

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

"வேண்டிய வேண்டியாங்
கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை"

இந்த இரண்டடிகளையும் காண்கின்ற போது "வேண்டிய வேண்டியாங் செய்தலால்" என்னும் 265-ம் குறள் நினைவிற்கு வருகின்றது. இதை எண்ணிக் கொண்டிருக்கும்போதே இவ்வகைய மற்றோர் குறிப்பு. பொருநராற்றுப்படையிலே 119-128 அடிகளுக்கிடையில் வருவதும் நினைவில் படுகின்றது. இந்த மூன்றிற்கும் ஏன் இந்த ஒற்றுமை? எப்படி இந்த ஒற்றுமை வந்தது? மற்றுமொரு குறிப்பு:

"கண்டுகேட்டு ண்டுயிர்த்
துற்றறியு ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்பது குறள்.

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து
உற்றறியும் ஐம்புலனைக்
கண்டடனய் மன்னுதலைக்
காண்"

என்பது மெய்கண்ட சிவாச்சாரியார் பாடல்.

மெய்கண்ட சிவாசாரியார் சைவ சமயத்தின் ஒளிவிளக்குகளிலேஒருவராகக் கருதப்படுவர். அத்தகையவர் எடுத்தாளுகின்றார் இதை.

திருக்குறளாசிரியர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னால் வாழ்ந்தவர். மெய்கண்ட சிவாசாரியார் நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர். இவர்கள் இருவரில் எவரைக் கள்ளர் என்பது? சொன்னால் அது அறிவுடைமையாகுமா? எதற்காக அவர் இந்தக் கருத்தைக் களவாட வேண்டும்? காசு, பணம் பெறவா? இல்லையே. அவர் வேறு எதற்காகவும் இதை எடுத்தாளவில்லை; இதன் அருமைக்காகத்தான் எடுத்தாண்டார்.

இவரை யாரேனும் கள்ளர் என்று சொன்னால், உமாபதி சிவாசாரியாரும் கள்ளர் தாம். இவரும் தமது "நெஞ்சு விடு தூது" என்னும் நூலில்,

"தலைப்பட்டார் தீரத்
துறந்தார் மயங்கு
வலைப்பட்டார் மற்றை
யவரென்று"

என்று குறிப்பிட்டுக் குறளையே நிறுத்திப் பாடுகின்றார்.

இவ்வாறே நான்மணி மாலையின் 28-ம் பாடலும்,

"நன்றறி வாரிற்
கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்"

என்னும் குறளைக் கூறி நிற்கின்றது. இவ்வாறே 33-ம் பாடலிலும் இத்தகைய முறைமை கையாளப்படுகின்றது.

"அறத்தா றிதுவென
வேண்டா சிவிகை
பொறுத்தானே டூர்ந்தா
னிடையை-மறுத்தார்
சம்பந்தன்"

இதில் குறளின் பொருண்மையை மறுத்ததாகத் திருஞான சம்பந்தன் நாவுக்கரையரின் சிவிகையைத் தூக்கிய நிகழ்ச்சி சொல்லப்படுகிறது.

எடுத்தாளும் அடியைப் பாடலின் முதலடியாக்கி அதையடுத்துத் தமது கைத்திறனைக் காட்டும் கவிஞர்கள் மிகப் பலர் நம்மிடையே. முதலடிக்கப்பால், மூலப்பாடலிலும் இல்லாத சிறப்பும், இனிமையும் ஓசையும், கருத்தாழமும் புதிய பாடலுக்கு இருப்பதைக் கண்டால் தமிழின் பாடலைச் சுவைக்கத் தெரிந்த எவர் உள்ளமும் கிளு கிளுப்படையாமல் இருக்கமுடியாது. ஒரே முதலடி! இரண்டு கவிஞர்கள்! பயன்? இரண்டு பாடல்கள் - அழகிய இனிய பாடல்கள். முன்னதைப் பின்னது வெல்லுந் திறம். உள்ளமே நெகிழும், கவிஞனின் சொல்லாட்சியினாலும் கவித்திறனாலும்! இந்த எண்ணங்களால் உள்ளங் குளிர்வதற்குப் பதிலாகக் கொதிக்கிறார்களே சிலர். அந்தப் பிஞ்சு உள்ளங்களின் முன்னால் இன்னும் சில குறிப்புக்களை வைக்கிறேன். சிந்திக்கட்டும்.

"மற்றும் தொடர்ப்பாடெவன்
கொலோ பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை"

இது 345-ம் குறள்.

"மற்றும் தொடர்ப்பாடெவன்
கொலோ பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும்
மிகை அவை உள்வழி
பற்று விளையாய்ப்
பலபல யோநிகள்
அற்று யுழலு
மறுத்தற் கரிதே"

என்பது வளையாபதி.

இதில் ஏன் ஒரு முழுக் குறளே முதலிரண்டடிகளாகப் பயனுக்கப்பட்டு ஒரு பாட்டாகி முடிந்தது? பொருள் புரியலாம். விரிக்காது விட்டுச் செல்கிறேன்.

"சார்புணர்ந்து சார்பு
கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

என்பது 359-ம் குறள்.

"சார்புணர்ந்து சார்பு
கெட ஒழுகின்என்றமையால்
சார்புணர்வு தானே
தியானமுமாம்- சார்பு
கெடஒழுகின் நல்ல
சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லை
வினைப் பற்று"

திருக்குறளின் அடிகள் எடுத்தாளப்படுவதோடில்லாமல், விளக்கமும் அல்லவா சொல்லப்படுகின்றது!

பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப்பாடும் அருணகிரிநாதரின் திருப்புகழிலே, சிற்றின்பச் சுவை அப்பாரம் அம்பாரமாகக் கிடைக்கும். மிகப் பெரும்பாலோர் ஒவ்வொரு பாடலின் கடைசியிலும் துதிக்கப்படுகின்ற கடவுளுக்காகப் படிப்பதில்லை; முன் நிற்கும் இன்பச் சுவை ததும்பும் அடிகளுக்காகவேதான் படிப்பது வழக்கம். கொக்கோகத்தையும் மிஞ்சும் சிற்றின்பச் சுவை மல்கும் திருப்புகழின் பாடல்களைப் பாடம் செய்து வைத்திருப்பவர்களின் மேலான நினைவிற்கு, "முத்தைத்தரு பத்தித் திரு" என்னும் பாடல் வரலாம். இந்தப் பாடலின் எத்தனை அடிகளை, பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் எடுத்தாண்டு இடைதொடுத்து மிகத்திறமையாகத் தாம் எண்ணிய பாவின் இலக்கணத்திற்கும் கட்டுப்படப் பாடியிருக்கின்றார் என்பதை அறிந்தால் வியப்பார்கள்.

வரமுதவிக் காக்கும்
மனமேவெண் சோதி
பரவிய"முத் தைத்தரு
பத்தித்-திருநகையத்
திக்கிறை சத்திச்
சரவணமுத் திக்கொருவித்
துக்குருப ரனென்ன வோ து."

குறியிட்ட எழுத்துக்கள் திருப்புகழின் பாடலடிகளைக் குறிக்கின்றன. இவருடைய இலக்கியத் திறமையோடும் கூடிய இலக்கண அறிவை யாரும் வியக்காமல்இருக்கமுடியாது. இப்படி இருக்க, நாட்டில் சிலர் குமைகின்றார்கள். பாவம்!

அடுத்து,

"ஆவின மழைபொழிய
இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோவ
அடிமை சாவ"

எனும் பாடலடியும் பலவிதமாகப் பாடப்பெற்றுள்ளது.

தமிழ் இலக்கிய உலகில் சுவை நிரம்பிய போர்கள் பல அடிக்கடி, புலவர்கள் இடையில் நிகழும். இப்போர்கள் என்றும் சாகா வரம் பெற்றவை. இத்தகைய போர்களில் ஒன்றுதான், மகனின் பெருமையைப் பிறர் சொல்லக் கேட்ட பின்னர்தான் பெற்றதாய் பெருமகிழ்வு கொள்ளுகின்றாள் என்பதும்.

சிலர், பெண்களுக்கு அறியாமை மிகுதி உண்டு. அதனால் பிறர் எடுத்துச் சொன்ன பிறகுதான் அவர்களால் அதை உணர முடிகின்றது என்றும், வேறுசிலர், பெற்றவள் தன் மகனைப் பற்றித் தான் முன்னமே அறிந்திருந்தாலும் அவன் பெருமை பிறரால் உயர்த்திச் சொல்லப்படும் போதுதான் உண்மையாகவே அவனைப் பெற்றெடுத்த அன்றையப் போதினும் அதிகமாக மகிழ்கின்றாள் என்றும், பலவாறாகச் சொல்லிக் கொண்டு வருவார்கள்.

இவ்வளவிற்கும் காரணமானது ஒரே ஒரு குறள்:—

"ஈன்ற பொழுதிற்
பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட
தாய்" (69)

இந்தக் குறளின் இதே அடிகள் வேறு சிலராலும் ஆளப்பட்டுள்ளன.

புறம் 277-ம் பாடலில் பூங்கன் உத்திரையார் என்னும் புலவர் "ஈன்ற ஞான்றினும் பெரிதே" என்றும், 278-ம் பாடலில் காக்கை பாடினியார் நச்செள்ளையார், "ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" என்றும் பாடியிருக்கின்றார்கள்.

இம்மூன்று மேற்கோள்களையும் நோக்க, இம்மூன்றும் ஒரே பொருண்மையில் ஒழுங்குற இயல்வது அழகாக இருக்கின்றது.

மேலும் ஒரு சான்று. அல்லம தேவரைக் கண்டுவிட்ட மாயைக்குக் காம நோய் தோன்றுகின்றது. இவளைக் காண்பவர்களுக்கு இவள் மேல் காதல் முருகிப் பொங்குவது மாறி, அல்லம தேவரைக் கண்ட மாத்திரத்தில் இவளுக்குக் காதல் மீறுகின்றது. நேரம் செல்லச் செல்ல நெருங்கும் மாலை நேரம் காமத்தீயை மேலும் வளர்க்கின்றது. அல்லம தேவரின் நினைப்பிலே உயிர் முதல் அனைத்தையும் பதித்துவிட்ட மாயையின் நிலையைக் கவிஞர் கூறும் பகுதி இது:

"காலை அரும்பிப்
பகலெல்லாம்
போதா யிருந்த காமமலர்
மாலை மலர்ந்து
பொருமலொரு
மாயை நாம மணிவல்லி"

எப்படியெல்லாம் இருந்து, கிடந்து, அழுது, புலம்பி, ஏங்கி, வீழ்ந்து, வாய் பிதற்றினாள் என்பனவற்றைத் தொடர்ந்து கூறிச் செல்கிறார்.

சிவப்பிரகாச அடிகள் இயற்றிய பிரபுலிங்க லீலையில் பிரபுதேவர் வந்த கதி56-ம் பாடலின் பகுதியே இது.

மேற்காணும் இந்த அடிகளைக் கண்ட மாத்திரத்தில் உங்களுக்கும் "காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி" என்னும் குறள் மனத்திற் பட்டிருக்குமே!

பிறருக்குக் கொடுக்கின்ற கொடையைத் தடுக்கலாகாது என்று இலக்கியங்கள் கூறுகின்றன. "ஈவது விலக்கேல்" என்று ஆத்தி சூடியும் கூறுகின்றது. "கொடுப்பது அழுக்கறுப்பான்" என்னும் 166-வது குறளின் எஞ்சிய அடிகள் "சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக் கெடும்" என்பன. இதன் எதிரொலி போலும்,

"கொடுப்பது விலக்கு
கொடியோய் உனதுசுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும்
இன்றிவிடு கின்றாய்"

எனவரும் கம்பராமாயண அடிகள்!

எந்தக் கட்சியைச் சார்ந்தோராயினும், அரசியலைப்பற்றிக் காரசாரமாகப் பேசும்போது அவர்கள் ஒரு குறளைத் தப்பாமல் எடுத்துக் காட்டிப் பேசுவதைக் காணலாம். அரசு தங்களை வஞ்சிக்கிறது என்ற ஒரு நோக்கம் அங்கு இருக்குமானால், அரசு தங்கள் நலனைக் காக்க மனமற்ற சோம்பேறியாக இருக்கிறது என்ற ஒரு நோக்கம் அங்கு இருக்குமானால், நிச்சயமாக இந்தக் குறளும் அங்கே இருந்தே தீரும். அது இதுதான்:

"அல்லற்பட் டாற்றது
அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத்
தேய்க்கும் படை"

என்னும் 555-ம் குறள். இந்தக் குறளின் அருமையும் பெருமையும், இது விளக்கும் அரிய உண்மையுமே இதைப்பற்றி அனைவரும் பேசவேண்டி நேர்கிறது. இளங்கோவடிகளும் சிலம்பில் ஒரு சீரிய இடத்தில் இதை வைத்திழைத்து நாடகத்திற்குத் தனிஎழில் சேர்த்தார். 19 ஊர்சூழ் வரியில் 15-18 அடிகள் இந்த உண்மையைக் காட்டுவன.

"அல்லலுற் றாற்றது
அழுவாளைக் கண்டேங்கி
மல்லல்மா மதுரையா
ரெல்லாருந் தாமயங்கிக்
களையாத துன்பமிக்
காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல்
வளைந்தது இதுஎன்கொல்?"

மதுரைநகர் மாந்தர் கண்ணகியைக் கண்டேங்கி இவ்வாறு இரக்கத்தோடும் அச்சத்தோடும் கூறுகின்றனர்.

தனிக் குறளிலே இதன் கருத்தைப் புரிந்துகொள்வதைக் காட்டிலும், நாடகக் காப்பியத்திலே ஒரு காட்சியின் வாயிலாக மக்கள் வாயினின்று இதைக் கேட்கையில், உலக வழக்கோடு ஒன்றி வருவதால் அதன் எளிமையும், அழுகின்றவளைப் பார்த்துக் கூறப்படுகின்ற இடத்தால் இதன் உயர்வும், அவளுக்குத் தவறிழைத்த நாட்டில் வாழ்கின்ற மக்களே கூறுகின்ற காரணத்தால் அதன் உண்மையும், அவர்கள் ஏங்கிக் கூறுவதால் இரக்கமும், என்கொல் என்று ஒரு வினவும் அதை அடுத்து வருவதால் (இந்தக் கருத்தில் பொதிந்திருக்கும் உண்மை வெடித்தால்) நேரக்கூடிய அழிவைப் பற்றிய அச்சமும், ஊடே இழைகின்ற துயரநெளிவும், இன்னபிறவும் நம் கண்முன்னர்க் காட்சியாக, செவி வழி ஒலியாகச் சென்று அறிவையே ஆட்கொள்ளுவதை உணரலாம்.

(தொடரும்)

நக்கீரர் கழகம், சென்னை.

மறைமலையடிகள்
ஆராய்ச்சிக் குழு.

காலம்: 28-10-'59 புதன் மாலை 6-15 மணிக்கு.

தலைவர்: பேராசிரியர்,
டாக்டர் அ சிதம்பரநாதன்,
எம். ஏ., பிஎச். டி.

பொருள்:
"மொழிவழி வரலாறு"

சொற்பொழிவாளர்:
இராம. சண்முகம் எம். ஏ.

இடம்:
தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

மூச்சடங்கும் வய திலேயே!

[தோழர் எம். ஜி. சக்கரபாணி அவர்களின் வேண்டுகோளுக் இணங்க, கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் அவர் களின் இறுதிக் கடனுக்காகக் கூடியிருந்தபோது, அங்கேயே எழுதப்பெற்ற பாடல்.]

சின்ன வயதுமகன்
சிரித்தமுகம் பெற்றமகன்
அன்னைக்குணம் படைத்த
அழகுமகன் சென்றனே!
கன்னல் மொழிஎங்கே?
கருணை விழிதானெங்கே?
மன்னர் மணிமுடியில்
வாழ்ந்திருந்த செந்தமிழை(த்)
தென்னர் பொருளாக்கித்
தீங்கவிதை தந்தமகன்
கண்மூடித் தூங்குகிறன்
கனவுநிலை காணுகிறன்!
விழுதுவிட வந்தமகன்
விழுந்துவிட்டான் சாவினிலே!
அழுதால் வருவானு?
அரற்றுவதால் கிடைப்பானு?
ஆறோடி நீரோடி
அழகிழந்த விழிகளெல்லாம்
போராடிக் கொண்டுவரப்
போமோ அவனுயிரை?
தன்னுயிரைத் தருவதனுல்
தங்கமகன் பிழைப்பானு?
என்னுயிரைத் தருகின்றேன்!
எங்கேஎன் மாகவிஞன்?
வெற்றிலையும் வாயும்
விளையாடும் வேளையிலே
நெற்றியிலே சிந்தை
நிழலோடி நின்றிருக்கும்
கற்றதமிழ் விழியில்
கவியாக வந்திருக்கும்
''அண்ணே'' என உரைத்தால்
அதிலோர் சுவையிருக்கும்
பிள்ளைப் பருவம்
பிழையா இளம்பருவம்
கழுத்தில் தவழ்ந்துவரும்
கைத்தறியின் துண்டெல்லாம்
பழுத்ததமிழ் பாடும்;
பண்புரைக்கும்; வாழ்கவெனும்!
வாழும் வயதுமகன்
வளர்ந்துவரும் தேன்கவிஞன்
ஆண்டிரண்டு செல்லவில்லை,
அன்புமனை கைப்பிடித்து!
பிஞ்சுமுகம் பாராமல்,
பேதைகுரல் கேளாமல்,
நெஞ்சொடிய ஓலமிடும்
நேயர்முகம் காணுமல்
காத்திருக்கும் படவுலகின்
கையணைவைக் கருதாமல்
நின்றது போல்நின்று,
நெடுந்தூரம் பறந்துவிட்டான்!
முதிர்ந்த கிழமிலையே!
மூச்சடங்கும் வயதிலையே!
உதிர்ந்த மரமிலையே!
உலர்ந்துவிட்ட கொடியிலையே!
வரண்ட குளமிலையே!
வற்றிவிட்ட நதியிலையே!
இருண்ட பொழுதிலையே!
ஏய்க்கின்ற நாளிலையே!
ஆரம்பமாவதெலாம்
பெண்ணுக்குள் என்றனே
ஆடி அடங்குகிறன்
மண்ணுக்குள்! என்சொல்வேன்?
எங்கினிமேல் காண்போம்?
எவர்இனிமேல் புன்னகைப்பார்?
தங்கமகன் போனபின்னர்
தமிழுக்கும் கதியிலையே!
வெங்கொடுமைச் சாக்காடே
விழுங்குவதற்கேற்ற பொருள்
மங்காத செங்குருதி
மகனென்றே எண்ணமிட்டாய்
கல்யாண சுந்தரனே!
கண்ணியனே! ஓர்பொழுதும்
பொல்லாத காரியங்கள்
புரியாத பண்பினனே!
சாவதுல கியற்கை!
சாவதற்கும் நீதியுண்டு!
நீதியிலாச் சாவுன்னை
நெருங்கிவிட்ட தென்றுலும்
வாழுந்தமிழ்நாடும்
வளர்தமிழும் கலைஞர்களும்
வாழ்கின்ற காலம்வரை
வாழ்ந்துவரும் நின்பெயரே!

—கண்ணதாசன்

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

அஞ்சுவதற்கு என்ன இருக்கிற தென்றல் விளக்குவதும் பொது வாகக் குடிமக்களுள் கொடியியலாம் குலமகளிர் கொற்றவன் கொலு விற்கு வருதல் அதிகமாக நடப்ப தில்லை. புறப் பொருள் வெண்பா மாலையில் ''மயிலன்னர் மன்றம் படார்'' என்பதனுல் ஊர்ப் பொது மன்றுகளிலே குலமகளிர் வரமாட் டார் என்பது காண்க. இதை இன்னும் விளங்க, இரா. இராக வையங்காரின் 'குறுந் தொகை விளக்கம்'-என்ற நூலில் 31-ம் பாட்டின் உரையைக் காண்க. எனவே மன்றுகளிலே வாராத மாண்புடை மகளிர் மன்னவன் அவைக்கு வந்தது வான்பேரச்சம் கொடுத்தது.

அம்மட்டோ? அவள் வடிவு கண்ட வாயிலோன் அவள் வடிவை வகைப்படுத்த முடியாது குளறு கிறன். மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும், கையில் தனிச் சிலம் பும் கண்ணீரும்-கொண்டு - ஒரு குல மகள் வாராத இடத்திற்கு வந்தாலே, தான் செய்த நீதியிலே குற்றம் குடி கொண்டுவிட்டதோ என்று கொற்றவன் நடுங்கிக் குலைந் தனன். நின்பால் என் கணவன் கொலைக்களப்பட்டான் என்று கேட் டதும் நீதி தவறிவிடக்கூடாது என்று அஞ்சியதனுல் நேர்மை தவறவில்லை. மேலும் கண்ட அள விலே தோற்கவில்லை என்ற வாதத்தை இளங்கோவடிகளே பொய்யாக்குகிருர். வஞ்சிக் காண் டத்தில் வாழ்த்துக் காதையில் உரைப் பாட்டு மடையில் ''காவ லன் தன் இடஞ்சென்ற கண்ணகி தன் கண்ணீர் கண்டு மண்ணர சார் பெருந் தோன்றல் உண்ணீ ரற்று உயிரிழந்தமை'' என்று உள்ளது. இதனுல் கண்ட அளவே யும் கண்ணீராலும் உயிர் போனது அறிகிறோம். வெண்பாவும் இதைத் தான் கூறுகிறது.

அதே காதையில் 13-ம் பாட்டில் ''தொல்லை வினையால் துயர்வுழந் தாள் கண்ணின் நீர்-கொல்ல உயிர் கொடுத்த கோவேந்தன் வாழியரோ'' என்றபோதும் கண் ணீர் கொன்றதாகவே இளங்கோ கூறுகிருர். இப்படி இளங்கோ கூறுவதால் வெண்பாவையும் அவர் தான் இயற்றி இருக்கிருர். மற்ற வெண்பாக்களை வைத்து இந்தக் கருத்தை ஓரளவுதான் மறுக்க முடியும். அப்படி மறுப்பவைதயும் மறுக்கமுடியும் என்பதையும் மறக்க வேண்டாம். எனவே நாம் இன்னும் நம்முடைய அறிவின் துணை கொண்டு சிலப்பதிகாரத்தை ஆராய்ந்த பின்தான் முடிவு கூற வேண்டும். ஆகவே அதை ஏனைய அறிஞர்களும் ஆய்வார்களாக.

மாற்ருர் எழுதியது ஏற்றமுடைய தாகவே இருப்பினும் பண்புடைச் சிலம்பில் ஏற்றி வைத்தார் எனின் அது எத்துணைத் துணிவுடைத்து. அப்படிப்பட்டவர் யார்? அக் கருத்துத் தவருகத்தான் இருக்க முடியும். ★

பெருமையோடு அளிக்கும்

அலமேலு நிலைய முதல் வெளியீடுகள்

★

கா. அப்பாத்துரையார் நூல்கள்:

1.	வாழ்க (2-ம் பதிப்பு)	3-00
2.	வெற்றித் திருநகர்	5-00
3.	சரித்திரம் பேசுகிறது (2-ம் பதிப்பு)	3-25
4.	வளரும் தமிழ் (2-ம் பதிப்பு)	3-00
5.	இலங்கைப் பேச்சுக்கள் (அச்சில்) ...	2-50

இன்னும் பல விரைவில் வெளிவர இருக்கின்றன.

★

அலமேலு நிலையம்,
சேப்பாக்கம் : : சென்னை-5.